Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038 (சி/2485)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 12 (31.07.2004) சனிக்கிழமை இதழ் :302

## லண்டனில் நேற்று நடந்த

# பாலா - ஹெல்கிசன் சந்திப்பில் எந்த முடிவுகளும் எட்டவில்லை!





(லண்டன்)

**அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் - தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.**

**லண்டனில் உள்ள கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் இல்லத்தில் நேற்றுக்காலை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.**

விதார் ஹெல்கிசனுடன் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கரும் கலந்துகொண்டார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் ஆரம்பமான இந்தச் சந்திப்பில், சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்கும் நோக்குடன் நான்கு நாள் விஜயத்தை இலங்கைக்கு மேற்கொண்டிருந்தபோது -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட அரசதரப்புப் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துககு விதார் ஹெல்கிசன் எடுத்து விளக்கினார்.

அத்துடன், சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைமைகள், கிழக்கு மாகாண நிலவரங்கள், அரசாங்கத்தின் அசமந்தப்போக்கு, யுத்த நிறுத்த உடன்படிக்கையின் நிலை, இடைக்கால நிர்வாக அலகு உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

எனினும், இந்தச் சந்திப்புத் தொடர்பாக கலாநிதி அன்ரன் பாலசிங்கமோ அல்லது நோர்வே தரப்போ அறிவிப்பு எதையும் வெளியிடவில்லை.

## நெடுந்தீவு குடும்பஸ்தர் சி.ஐ.டியினரால் கைது!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த சி.இரத்தினம் (வயது - 48) என்ற குடும்பஸ்தர் நேற்றுப் பகல் நயினாதீவில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இவரைப் பொலிஸார் நயினாதீவில் இருந்து பயணிகள் படகு மூலம் குறிகட்டுவான் துறையூடாக கொண்டுசென்றனர்.

நெடுந்தீவு ப.நோ.கூ சங்கப் படகான உதயதாரகையில் பணியாற்றும் இவர், படகின் திருத்தவேலை காரணமாக நயினாதீவுக்கு நேற்று முன்தினம் சென்றிருந்தார்.

நயினாதீவில் தங்கியிருந்தவேளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் இளைஞர் ஒருவர் சாய்ந்தமருதில் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

அம்பாறை - சாய்ந்தமருது நாலாம் குறிச்சியைச்சேர்ந்த ஆதம் பாவா அப்துல் ஹக்கீம் (வயது -23) என்ற முஸ்லிம் இளைஞர் நேற்று அதிகாலை நான்கு மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசலின் கொடியேற்றத் திருவிழாவிற்கு சென்று விட்டுத் திரும்புகையிலேயே, குறித்த இளைஞர் சாய்ந்தமருது பிரதான வீதியிலுள்ள வர்த்தக நிலையத்திற்கு முன்னால் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டாவ படுகொலைகளுக்கு

# பயன்படுத்திய வாகனங்கள் அடையாளம் காணப்பட்டன!

(கொழும்பு)

கொட்டாவவில் கருணா குழுவைச் சேர்ந்த எண்மர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இரு வாகனங்கள் தொடர்பான தகவல்கள் பொலிஸாருக்கு கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகனங்களில் உள்ள பதிவு இலக்கங்களைக் கொண்டு உரிமையாளரைத் தேடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இரண்டு வாகனங்களும் படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்கு பலதடவைகள் சென்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றுலாத்துறையை பாதிக்கும்

# எந்த நடவடிக்கையிலுமே புலிகள் ஈடுபட்டதில்லை!

### அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருபோதுமே சுற்றுலாத்துறையைப் பாதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதில்லை இந்த நிலையில், இலங்கையில் சுற்றுலாத்துறை வீழ்ச்சி ஏற்பட வாய்ப்பில்லை என அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார். அமைச்சு அலுவலகத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி உதவி வழங்கப்போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்திருக்கிறார். ஆனால், அவ்வாறான உதவியை அரசாங்கம் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை

கருணாவை நாட்டைவிட்டு வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக வெளியான செய்திகள் தவறானவை.

ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டமிட்ட பொய்ப்பிரசாரமே இது. ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே கருணா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சார சபை ஊழியர் மின்சாரம் தாக்கிப் பலி!

இணுவில் பகுதியில் மின்சார சபையைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றைய தினம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தின்போது, இணுவில் மேற்கு, இணுவிலைச் சேர்ந்த 25 வயதான ப.கஜேந்திரன் என்ற இளைஞரே மரணமடைந்தவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - மின் இணைப்பு ஒன்றைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம், மின்சாரம் தாக்கியதன் காரணமாக இவர் மரணமடைந்தார்.

இவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (தீ)

## கருணாவுடன் தொடர்புடைய இளைஞர் சுட்டுக்கொலை!

(பொலநறுவ)

பொலனறுவ மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தைப் பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களால் நேற்று அதிகாலை சுட்டுக கொல்லப்பட்டார்.

20 வயதான முத்துக்கல் வாசியான சிவநாயகம் புஸ்பகுமார் என்ற இளைஞரே சுட்டுக்கொல்லப்பட்டதாக அடையாளம் காணப்பட்டார்.

கைகள், கால்கள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் கிடந்த இந்தச் சடலத்தின் அருகே 'துரோகி' என எழுதப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட இளைஞர் கருணா அணியினருடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார் என தமது விசாரணைகளில் இருந்து தெரிய வந்ததாகவும் பொலிஸார் மேலும் தெரிவிததனர்.

## புலிகளால் 34 சிறுவர்கள் யுனிசெப்பிடம் ஒப்படைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள இடைத்தங்கல் முகாமில் இருந்து 34 சிறுவர் போராளிகளை, தமிழீழ விடுதலைப்புலிகள் தம்மிடம் ஒப்படைத்திருப்பதாக யுனிசெப் தெரிவித்துள்ளது.

14 முதல் 17 வயது வரையான 21 யுவதிகளும், 13 இளைஞர்களுமே ஒப்படைக்கப்பட்டதாக யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து இந்தச் சிறுவர்களின் எதிர்காலம் குறித்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# உரங்களின் நிர்ணய விலை நிதித்துறையால் அறிவிப்பு!

விவசாய உரங்களின் ஆகக் கூடுதலான விலையினை நிதித்துறையின் விலைக்கட்டுப்பாடு பகுதி அறிவித்துள்ளது.

விவசாயிகளின் நலன் கருதி இந்தப் புதிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த விலையில் கூடுதலாக உரங்களை விற்கவேண்டாம் என விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் கா.செழியன் தெரிவித்தார்.

விலைகள் விபரம் வருமாறு -

| பசளையின் பெயர் | உற்பத்தி நிறுவனத்தின் பெயர் | வன்னி விற்பனை விலை ரூ.ச | யாழ். விற்பனை விலை ரூ.ச |
|---|---|---|---|
| யூரியா (50 கிலோ) | ஈ.ரி.ஏ லங்கா | 585. 00 | 600. 00 |
| | சி.ஐ.சி | 575. 00 | 595. 00 |
| | லக்போற | 550. 00 | 570. 00 |
| | பவர் | 585. 00 | 605. 00 |
| அமோனியா (50 கிலோ) | ஈ.ரி.ஏ லங்கா | 1145. 00 | 1160. 00 |
| | சி.ஐ.சி | 1140. 00 | 1160. 00 |
| | லக்போற | 895. 00 | 910. 00 |
| | பவர் | 1170. 00 | 1185. 00 |
| ரீ.எஸ்.பி (50 கிலோ) | ஈ.ரி.ஏ லங்கா | 1470. 00 | 1485. 00 |
| | சி.ஐ.சி | 1495. 00 | 1515. 00 |
| | லக்போற | 1195. 00 | 1210. 00 |
| | பவர் | 1520. 00 | 1540. 00 |
| எம்.ஓ.பி (50 கிலோ) | ஈ.ரி.ஏ லங்கா | 1405. 00 | 1420. 00 |
| | சி.ஐ.சி | 1405. 00 | 1420. 00 |
| | லக்போற | 1155. 00 | 1170. 00 |
| | பவர் | 1430. 00 | 1450. 00 |
| வி-1 (50 கிலோ) | ஈ.ரி.ஏ லங்கா | 1170. 00 | 1190. 00 |
| | சி.ஐ.சி | 1180. 00 | 1200. 00 |
| | லக்போற | 1115. 00 | 1130. 00 |
| | பவர் | 1180. 00 | 1200. 00 |
| ரீ.டி.எம் (50 கிலோ) | ஈ.ரி.ஏ லங்கா | 875. 00 | 890. 00 |
| | சி.ஐ.சி | 910. 00 | 925. 00 |
| | லக்போற | 800. 00 | 815. 00 |
| | பவர் | 905. 00 | 920. 00 |

## ஆங்கிலப் பரீட்சைக்கான முன்னோடிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் பிஸ்னஸ் கல்லூரியினால் யாழ்.நகரில் நடத்தப்படவுள்ள சர்வதேச தரத்திலான ஆங்கிலப் பரீட்சைக்கான முன்னோடிக் கருத்தரங்கு இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.பொது நூல் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் முதன் முறையாக நடத்தப்படவுள்ள இந்தப்பரீட்சை தொடர்பாக பரீட்சை சார்ந்த சேவைகள் முகாமையாளரான ஜெயராட் ஜோர்ச் வேத் கருத்துரை வழங்கவுள்ளார்.

# கிராம அலுவலர்களுக்கு இரு நாட்கள் பயிற்சி!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள கிராம சேவையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று - இன்றும், நாளையும் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இருநாட்களும் முழுநாள் கருத்தரங்காக நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் கிராம சேவையாளர்களுக்கு நிவாரண விநியோகம் காணிப்பதிவுகள் உட்படப் பல்வேறு விடயங்கள் தொடர்பாக தகுதிவாய்ந்த அதிகாரிகளினால் விளக்கமளிக்கப்படவுள்ளது.

இருநாட்களும் காலை 9 மணி முதல் பயிற்சிப் பட்டறை நடத்தப்படுமென யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் எ.சிவசாமி தெரிவித்தார். (ப)


**WALK IN INTERVIEW** (நேர்முகத் தேர்வு)

We are Looking for capable persons for the following posts.

1. **ASSISTANT ACCOUNTANT**
(Degree or Professional qualifications with 2 Years Working experience)

2. **ELECTRICIAN**
(3 Phase - Super market Freezer, A/C, Generators and etc., 2 Years working experience)

3. **CASHIERS - (Cash Counter)**

4. **COMPUTER OPERATORS**
(G.C.E. A/L and above with Computer knowledge)

**Interview will be held on 01st August 2004 at 10.00 a.m. At our under mention address.**

**Note: Please bring with you the curriculum vitae and relevant documents.**

Administrative Officer
**Annai Nagaa Food City**
175, K.K.S Road, Jaffna.
T.P: 021 - 2225515

(சி/2795)


# பட்டதாரிகள் நியமனத்தில் முறைகேடு குடாநாட்டு விண்ணப்பதாரிகள் விசனம்

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகள் நியமனத்தில் முறைகேடுகள் நடந்திருப்பதாக, யாழ்.குடாநாட்டுப் பட்டதாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பட்டதாரிகள் நியமனத்தில் எந்த அரசியல் செல்வாக்கும் இடம்பெற மாட்டாதென நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்திருந்தார்.

ஆனால், பட்டதாரிகளைத் தெரிவு செய்வதில் எந்த நடைமுறை பின பற்றப்பட்டுள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியாதுள்ளது.

பட்டதாரிகள் நியமனத்துக்கான தெரிவு, பட்டம் பெற்ற வருடத்தின் அடிப்படையிலா, பெற்ற துறையின் அடிப்படையிலா, பட்டம் பெற்ற தரத்தின் அடிப்படையிலா தெரிவு இடம் பெற்றிருக்கிறது.

கணினி, ஆங்கில அறிவில் மேலதிக தகைமைகளைப் பெற்றவர்கள் அல்லது வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் பிரதேச செயலர் பிரிவுக்குள் இருக்கக்கூடிய வெற்றிடங்களின் அடிப்படையில் இந்தத் தெரிவு இடம்பெற்றிருக்கிறது.

தற்போது வெளியான இடங்களுக்கும் இவ்வாறான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வேலையற்றுள்ளனரா என்பதை உறுதிப்படுத்த சத்தியக் கடதாசி அனுப்புமாறு கோரப்பட்டு, அதன் முடிவுத் திகதி 27 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டபோதிலும், 25 ஆம் திகதி முதலாவது பெயர்ப்பட்டியல் தயார்படுத்தப்பட்டது. இது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரதேச செயலர் பிரிவுகளிலும் பட்டதாரிகள் ஓரங்கட்டப்பட்டுள்ளனர். 350 பட்டதாரிகளைக் கொண்டிருந்த தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் ஒருவர் மட்டும் தெரிவாகியுள்ளார். இதேபோன்று வேலணையிலும் இடம்பெற்றிருக்கிறது.

இவ்வாறு பட்டதாரிகளின் நியமனம் வழங்குவதில், தெரிவானவர்களின் பட்டியல்களில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களை நீக்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என குடாநாட்டு பட்டதாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இரசாயனவியல் அறிவுப் போட்டி

இலங்கை இரசாயனவியல் கழகம் வருடாவருடம் நடத்தும் "அவுஸ்ரேலியன் தேசிய இரசாயனவியல் அறிவு போட்டிப் பரீட்சை" இன்று காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் இருந்து 354 மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர். இப்பரீட்சையானது கனிஸ்ட பிரிவு, சிரேஸ்ட பிரிவு என இரண்டு பிரிவுகளாக நடைபெறுகின்றது.

## சாவகச்சேரி நகரில் பழனிவேல் பவனி

சாவகச்சேரி டச்சு வீதி பழனி ஆண்டவர் அலய ஸ்ரீ பழனி வேல் பவனி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் சாவகச்சேரி பழனி ஆண்டவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கோலாட்டம், யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாலய மாணவிகளின் செம்பு நடனம், வட்டுக்கோட்டை புரவு நடன குழுவினரின் குதிரை ஆட்டம், தில்லை சிவலிங்கத்தின் மறவர் படையின் தீச்சுடர் விளையாட்டு, ஜோன்சன் குழுவினரின் காவடியாட்டம் என்பனவும் இடம் பெறவுள்ளது.

இந்தப்பவனி ஆலயத்திலிருந்து புறப்பட்டு இரா மலிங்கம் வீதிஊடாக கண்டி வீதியைச் சென்றடைந்து,அங்கிருந்து தபாற்கந்தோர் வீதியூடாக ஆலயத்தைச் சென்றடையும். (29)

## காசாளர் சுந்தரத்துக்கு அஞ்சலிக் கூட்டம்

மானிப்பாய் மக்கள் வங்கியின் காசாளர் சுந்தரம் பஞ்சலிங்கம் படுகொலைக்கு காரணகர்த்தாக்களைக் கண்டித்தும், அன்னாரை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தவும், வட பகுதியிலுள்ள எல்லா வங்கிகளின், அனைத்துத் தரங்களிலுமுள்ள ஊழியர்களின் அஞ்சலிக் கூட்டமொன்று நாளை காலை 9.00 மணிக்கு யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த அஞ்சலிக் கூட்டத்தில் சகல வங்கி உழியர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

## கௌரவிப்பு நிகழ்வு

சரசாலை மேற்கு இராமாவில் பிள்ளையார் கோவில் மண்டலாபிஷேக பூர்த்தி விழா நிறைவையொட்டி இவ்விழாவை சிறப்புற நடத்திய பிரதம சிவாச்சாரியார் த. இராஜேஸ்வரக்குருக்கள், ச.லோகேஸ்வரசர்மா, இ.ரமணிதரஸர்மா ஆகியோருக்கு ஆலயபரிபாலன சபையினர் இன்று 11.30 மணிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கவுள்ளனர். (29)

## ஆசிரியர் வெற்றிடத்துக்கு நேர்முகப்பரீட்சை

கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாட நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இலங்கையிலுள்ள சகல தேசிய கல்வியற் கல்லூரிகளிலும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பூர்த்தி செய்தவர்களுக்கே ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி இசுறுபாயவிலுள்ள கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது. (17)

## பரதநாட்டிய அரங்கேற்றம்

நாட்டிய கலாமாணி அகல்யா சுந்தரத்தின் மாணவி டயானார்த்தி அரியநாயகத்தின் நடன அரங்கேற்றம் இன்று காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில், யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி பொ.சி.வரதராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## சமகால அரசியற் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாணவர் பேரவை நிறுவனத்தால் நடத்தப்பட்டுவரும் சமகால அரசியற் கருத்தரங்கின் 17 ஆவது தொடர், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி.ப.3.30 மணிக்கு கரவெட்டி பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் -'சமாதான முயற்சிக்கான தடைகளும், உலக நாடுகளின் கொள்கை வகுப்புக்களும்' எனும் தலைப்பில் கே.ரி. கணேசலிங்கம் கருத்துரை வழங்குவார்.

# சட்டவிரோதமுறையில் சாராயம் விற்ற 7 பேருக்கு யாழ்.நீதிமன்றம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோதமாக அனுமதிப் பத்திரம் இன்றி அரசாங்கச் சாராயம் விற்ற ஏழு நபர்களுக்கு 38 ஆயிரம் ரூபா குற்றப் பணத்தினைச் செலுத்துமாறு யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

கோப்பாய், ஈச்சமோட்டை, யாழ். நகர், நல்லூர், கோண்டாவில், அரியாலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 7 நபர்கள் சட்டவிரோதமாக அரசாங்க அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் விற்பனை செய்ததாகக் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் சிறுகுற்றத்தடுப்புப் பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 7 நபர்களும் தண்டப் பணம், தர்மப்பணம் ஆகியவற்றைச் செலுத்த யாழ்.மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

# உள்ளூராட்சி வார நிறைவு நாள் நிகழ்வு

(மானிப்பாய்)

வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிறைவு நாள் நிகழ்வாக - பரிசளிப்பு மற்றும் கலைநிகழ்வுகளும் பிரதேசசபையின செயலாளர் திருமதி.பு.சிவலிங்கம் தலைமையில் சங்கானை நிறஞ்சனாஸ் திரையரங்கில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு பிரதம விருந்தினாக யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஏ.வி. மோகன்றாஸ், சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியின் அதிபர் திருமதி அ. வேலுப்பிள்ளை ஆகியோரும்,

சிறப்பு விருந்தினர்களாக சங்கானை அரசியற்துறைப் பொறுப்பாளர் அ.அன்பு, சங்கானை மக்கள் வங்கியின் முகாமையாளர் பொ. அச்சுதம்பிள்ளை, இலங்கை மின்சாரசபை மின் அத்தியட்சகர் பொ. சண்முகானந்தசிவம் ஆகியோரும் கலந்துகொள்ளவர். (100)

## திருநாள் திருப்பலி

(மானிப்பாய்)

மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத்தின் வருடாந்தத் திருநாள் திருப்பலி நாளை காலை நடைபெறவுள்ளது. இன்று மாலை நற்கருணை ஆராதனை நடைபெறும். (100)


KINROSS TRAVELS




விமான ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்பவர்களுக்கு விசேட சலுகை
3 நாட்கள் Hotel இலவசம். இச்சலுகை
August 31 வரை மட்டுமே



KINROSS TRAVELS & TOURS
No. 344, Galle Road,
Bambalapitiya, Colombo - 04
T.P: 2504665, 4519924
Fax: 4519925

(சி/2790)

**The Royal College of Jaffna**

ஆங்கிலம் படிக்கின்றீர்களா, புத்திசாலியாகவும் இருக்கின்றீர்கள். ஆனால் கதைக்க முடியவில்லையா? கவலை வேண்டாம்.

Spoken English By :
விக்கினேஸ்வரன் ஆச்சாரி :
426, (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்,
பிளாக் வீதி, சங்கானை.

(சி-2734)

புலிகள் மீட்டெடுத்த எலும்புக் கூடுகளை

## ஜெனிவாவிலிருந்து வருகைதந்த தடயவியல் அதிகாரிகள் பார்த்தனர்

கிளிநொச்சி மாவட்டத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட, எலும்புக் கூடுகளை ஜெனீவா தடயவியல் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று நேற்று முன்தினம் பார்வையிட்டது.

1996 ஆம் ஆண்டு முதல் 1998ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில், படையினர் கிளிநொச்சி நகரத்தில் நிலைகொண்டிருந்த போது, தமது சொந்த இடங்களைப் பார்வையிடுவதற்காகச் சென்ற 180 க்கும் அதிகமான பொதுமக்கள் காணாமற்போயிருந்தனர்.

தற்போது விடுதலைப் புலிகளால் கண்டெடுக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வரும் எலும்புக்கூடுகளில் அநேகமானவை, இவ்வாறு காணாமல் போனவர்களது எலும்புக்கூடுகளாக இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

இந்த எலும்புக் கூடுகளையே ஜெனிவாவில் இருந்து வந்த தடயவியல் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

## சரத் என் சில்வாவின் சர்ச்சைக்கு முடிவுகட்ட சுயாதீன விசாரணைக் குழுவை நியமிக்கவும்

### ஐக்கிய தேசியக்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

நீதியரசர் சரத் என். சில்வா தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைக்கு முடிவு காண்பதற்குச் சுயாதீன விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற விடயத்தை ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இந்த விடயத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

தாம் இவ்வாறு வலியுறுத்துவது எவர் மீதும் குற்றம் காண்பதற்காக அல்ல, தன்மீது அபாண்டமான பழி சுமத்தும் வகையில், ஐந்து பொலிஸ் அதிகாரிகள் செயற்பட்டிருப்பதாகப் பொலிஸ் மா அதிபரிடம் நீதியரசர் முறைப்பாடு செய்துள்ளனர். இது மிகவும் பாரதூரமான விடயம்.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கா மீதான விசாரணைகளை கைவிட்டால், நீதியரசர் விவகாரம் தொடர்பான விசாரணைக்கான கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி கைவிடும் என்று கூறப்படுவது தவறு.

ரவி கருணாநாயக்கா தொடர்பாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள விசாரணைகள் உடன் இடம் பெறவேண்டும் என்பதுதான் அவரது விருப்பம். அதன்மூலமே உண்மை நிலையை மக்கள் அறிந்துகொள்ள முடியும்.

இந்த விவகாரத்தையும், நீதியரசர் விடயத்தையும் தொடர்புபடுத்திப் பேசுவது அர்த்தமற்றது என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

## இனந்தெரியாத படகுகள் முல்லைத்தீவில் நடமாட்டம்

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் - சிதைந்த நிலையிலுள்ள கப்பல் ஒன்றுக்கருகில் - அடையாளம் காணப்படாத இரண்டு படகுகள் நடமாடியதை கடற்படையினர் அவதானித்ததாக, படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த் புதன்கிழமை இரவு 7.30 மணியளவிலேயே இந்தப் படகுகளைக் கடற்படையினர் அவதானித்ததாகவும், இதே நேரம் முல்லைத்தீவின் வட மேற்குப் புறத்தே நடுத்தர கலிபர் துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் கேட்டதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

## மூன்று திணைக்களங்கள் ஊழல் மலிந்தவையாம்!

(கொழும்பு)

இலங்கையிலேயே மிகவும் அதிகளவான ஊழல் மோசடிகள் நிறைந்த மூன்று அரச திணைக்களங்களின் உயர்மட்டத் தலைமைத்துவ நிர்வாகங்களில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

ஆட்பதிவு திணைக்களம், குடிவரவு - குடியகல்வு திணைக்களம், மோட்டார் வாகனப் பதிவாளர் திணைக்களங்கள் ஆகியனவே மோசடிகள் ஊழல்கள் நிறைந்த திணைக்களமாக இணங்காணப்பட்டுள்ளது.

இந்தத் திணைக்களங்களின் உயாமட்டத் தலைமைகளை மாற்றப்படவுள்ளதுடன், இந்த மூன்று திணைக்களும் சட்டம், ஒழுங்குபேணும் அமைச்சில் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்படவுள்ளது.

இந்தியாவிலிருந்து பாதுகாப்பாக

## அகதிகளை அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### மன்னார் அரச அதிபர் கோரிக்கை

இந்தியாவில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகள் தற்போது கடல் மார்க்கமாகப் பாதுகாப்பற்ற முறையில் சிறிய கண்ணாடி இழைப்படகுகளில் மன்னார் வருவது அதிகரித்துள்ளதாகவும், இவர்கள் பாதுகாப்பான முறையில் வருவதற்கான மாற்று நடவடிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய - இலங்கை அரசுகளுடன் கதைத்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென- மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்ட அரச செயலகத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடந்த கலந்துரையாடலின்போதே, அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது -

கடந்த ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து 977 அகதிகள் மன்னாருக்கு வருகைதந்தனர். இந்த ஆண்டு ஜூன் 31 ஆம் திகதி வரை 1500 பேர் வந்துள்ளனர்.

இவ்வாறு வரும் அகதிகள், ஒருவருக்கு ரூபா பத்தாயிரம் வழங்கி, இந்திய மீன்பிடி இழுவைப்படகுகளிலும், சிறிய கண்ணாடி இழைப்படகுகளிலும் மன்னார் வருகின்றனர். சில வேளைகளில் இவர்கள் கடலின் நடுவேயுள்ள மணற்திட்டுக்களில் இறக்கிவிடப்படுகின்றனர். இதனால் உயிராபத்துக்களும் ஏற்படுகின்றன.

மன்னார் - வவுனியா தரைப் பாதை திறக்கப்படமுன்னர், கற்பிட்டி- மன்னாருக்கு இடையில் ஏழு மணி நேரமாக படகுச்சேவை நடத்தப்பட்டது. ஆனால், தலைமன்னாருக்கும், இராமேஸ்வரத்துக்கும் இடையில் படகுச்சேவை நான்கு மணிநேரத்தில் நடத்தப்படலாம்.

எனவே, இவ்வாறான ஒரு படகுச் சேவையை நடத்தி, அகதிகளை அழைத்துவரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு நாட்டு அரசாங்கங்களுடனும் பேச்சு நடத்த வேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கனகரத்தினம், செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர், வினோநோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (03)

## மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கும் திட்டமில்லை!

### மின்சாரசபை வட்டாரங்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான திட்டம் எதையும் தாம் கொண்டிருக்கவில்லை என, இலங்கை மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட எரிபொருள் மின்சக்தித்துறை அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த, 26 பில்லியன் ரூபா பெறுமதியான கடன் காரணமாக இலங்கை மின்சாரசபை சிரமங்களை எதிர்கொள்கிறது.

ஒரு அலகு மின்சாரத்தில், இலங்கை அரசாங்கத்துக்கு 2 ரூபா நட்டம் ஏற்படுவதாக இருந்தபோதிலும், மின்கட்டணத்தை அதிகரிப்பதன் மூலம், இதற்குரிய தீர்வைப் பெறமுடியாது எனத் தெரிவித்தார்.

உலகின் மிக அதிகமான மின்கட்டணத்தை அறவிடும் நாடாக இலங்கை தற்போது இருந்துவருவதாகவும், இந்த நிலையில் மின் கட்டணத்தை மேலும் அதிகரிப்பது என்பது மிகவும் பாதகமான விடயமாக அமையும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இடைக்கால நிர்வாக அமைப்பு யோசனையை தோற்கடிப்போம்!

### அத்துரலிய ரத்தினதேரர் தெரிவிப்பு

இடைக்கால நிர்வாக அமைப்பை ஏற்படுத்துவதற்கு, கூட்டமைப்பு அரசு தயாராகுமானால் எம் இனத்தின் அனைத்து சக்திகளையும் ஒன்றிணைத்து, தேசிய முன்னணி ஒன்றை அமைத்து அரசின் யோசனையைத் தோற்கடிப்போம் என, ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைவர் அத்துரலிய ரத்தினதேரர் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவினால் இந்த ஆலோசனை பற்றி நாடாளுமன்ற விவாதத்துக்குப் பிரேரணை சமர்ப்பித்து, கூட்டமைப்பு அரசினதும், ஐக்கிய தேசிய கட்சியினதும் நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தும் உபாயமே என்றும் தேரர் தெரிவித்தார்.

பொதுமக்களைத் தவறான வழிக்கு இட்டுச்சென்று ஈழ இராஜ்ஜியத்தை விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வழங்கும் தேசத்துரோக நடவடிக்கையின்போது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கோ, ஐக்கிய தேசிய கட்சி அரசுக்கோ எந்த வித ஆதரவையும் வழங்கப்போவதில்லை என்றும், நாட்டைப் பாதுகாப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய தயாராகவுள்ளது என்றும் மேலும் தெரிவித்தார். (தே).

## பட்டதாரிகள் பயிற்சிக்காலம் ஒருவருடமாகக் குறைப்பு!

(கொழும்பு)

அரசாங்க சேவையின் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளபட்டதாரிகளின் பயிற்சிக்காலத்தை ஒருவருடமாகக் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானத்தை அறிவிக்கும் முகமாக நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

தேர்தெடுக்கப்படும் பட்டதாரிகளுக்கு இருவருடங்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படும் என முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.(தே)

## காலிமுகத்திடல் பகுதியில் மூன்று தமிழர்கள் கைது!

விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஒரு யுவதி மற்றும் இரண்டு இளைஞர்கள் என, மூவரைக் கடந்த 27 ஆம் திகதி, காலிமுகத்திடலில் வைத்து இராணுவத்தினர் கைதுசெய்ததாக அறிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் - திருகோணமலையைச் சேர்ந்த பி.கருணதாஸ், பி.மில்கேந்திரா மற்றும் பி.கமலா ஆகியோராவர்.

சந்தேக [illegible]மிருந்து [illegible] சீட்டுகள் மூன்றும், புலிகளுக்குரிய அடையாள அட்டைகளும் இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும்.

இவர்கள் மூவரும் மேலதிக விசாரணைகளுக்காகக் கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (தே)

## இறைமையை பாதிக்காத பேச்சுக்கு ஜே.வி.பி.ஆதரவு வழங்குமாம்

### அமைச்சர் அநுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

இலங்கையின் இறைமையைப் பாதிக்காதவகையில் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு வெளிநாட்டு அனுசரணையுடன் தீர்வு காணப்படுமாக இருந்தால், அதனை ஜே.வி.பி வரவேற்குமென அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் அமைச்சர் அநுரகுமார திஸநாயக்க - ஐரோப்பிய யூனியன் பிரதிநிதி வூட்டர் வில்டனுடன் கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இவருடனான சந்திப்பில், அநுரகுமார மேலும் தெரிவித்ததாவது-

வெளிநாட்டு அனுசரணையாளர்கள் கட்டாயம் இலங்கையின் சுதந்திரத்தை மதிக்கவேண்டும். அத்துடன், விடுதலைப்புலிகள் சாமாதனப் பேச்சு வார்த்தையையா? போரையா? யுத்தநிறுத்தத்தை நீடிப்பதையா? விரும்புகின்றார்கள் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

அத்துடன், வடக்கு - கிழக்கு தீர்வாக மத்திய அரசாங்கத்திலிருந்து அதிகாரங்களைப் பிரித்துக் கொடுப்பதாகவே இருக்கவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

## கட்டுநாயக்கா விமானநிலையத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது

கட்டுநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

திடீரென ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்பட்டால், கட்டுநாயக்க விமான நிலையத்தில், சேவையில் ஈடுபடுவதற்காக 120 பேர்களடங்கிய பொலிஸ் விசேட அதிரடிப் படையொன்று பயிற்சி பெற்றுள்ளது.

கொழும்பின் பாதுகாப்புத் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட விசேட பாதுகாப்பு வேலைத்திட்டத்தின்கீழ் இந்தப் பொலிஸ் குழுவை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் பாதுகாப்புக்கென அமர்த்தப்பட்டுள்ள விமானப்படை மற்றும் விமானத் தளப் பாதுகாப்புப் பிரிவுக்கு மேலதிக இந்தப் பொலிஸ் குழுவினர் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார். (தே)

# பங்களாதேஷ் அணியை வீழ்த்திய பாகிஸ்தானுக்கு ஆறுதல் வெற்றி!



ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி - 2004

(கொழும்பு)

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் கடைசி சுப்பர் லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி ஆறுதல் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களைக்கூட தாக்குப்பிடிக்கமுடியாமல் 45.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 166 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

பங்களாதேஷ் அணியில் காலித் மசூத் அரைச்சதம் அடித்தார். இவர் மொத்தம் 94 பந்துகளைச் சந்தித்து 54 ஓட்டங்களை எடுத்தார். இதில் 5 பவுண்டரிகள் அடங்கும்.

அடுத்தபடியாக தொடக்கவீரர்களில் ஒருவரான ரஜின் சலேக் 23 ஓட்டங்களையும், முஷ்பிகுர் ரஹ்மான் 21 ஓட்டங்களையும் எடுத்தனர். உதிரிகள் மூலம் 37 ஓட்டங்கள் கிடைத்தன.

ஒட்டுமொத்தத்தில் பாகிஸ்தான் வீரர்களின் பந்துவீச்சைச் சமாளிக்க முடியாமல் பங்களாதேஷ் வீரர்கள் குறைந்த ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினர்.

பாகிஸ்தான் அணி சார்பில் ஷபீர் அகமட் 32 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். முகமட் சமி, செகைப் அக்தர், அப்துல் ரஸாக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், சொகைப் மலிக் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஒரு கட்டத்தில் பங்களாதேஷ் அணி 75 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து தவித்துக்கொண்டிருந்தது. அப்போது அந்த அணி 100 ஓட்டங்களையாவது எட்டுமா என்ற சந்தேகம் நிலவியது.

இருந்தபோதும் காலித் மசூத் மற்றும் மஞ்சுரல் இஸ்லாம் ஆகியோரது ஆட்டத்தால் அந்த அணி சிறிது தாக்குப்பிடித்து ஆடி 100 ஓட்டங்களைக் கடந்தது.

167 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்கு பாகிஸ்தான் அணிக்கு நிர்ணயிக்கப்பட்டது.



பாகிஸ்தான் அணி 41 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

அந்த அணியின் தொடக்க வீரர்களான ஹமீட் 11 ஓட்டங்களிலும், நசீர் 27 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அடுத்து களமிறங்கிய சொகைப் மலிக் 48 ஓட்டங்களை எடுத்த நிலையில் கிளீன் போல்டானார்.

பின்னர் களமிறங்கிய யூசுப் யுகானா 39 ஓட்டங்களை எடுத்து பெவிலியன் திரும்பினார். அவர் மஞ்சுரல் பந்தில் ரஹ்மானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

யூனுஸ்கான் 16 ஓட்டங்களிலும், அப்துல் ரஸாக் 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பிடித்தார் ராவிட்



டெஸ்ட் போட்டிக்கான சர்வதேச தரப்பட்டியலில் துடுப்பாட்டவீரர்கள் வரிசையில் ராகுல் ராவிட்டும், பந்து வீச்சாளர்கள் வரிசையில் முத்தையா முரளிதரனும் முதலிடத்தைப் பிடித்துள்ளனர்.

பிரைஸ் வோட்டர் கூப்பர்ஸ் நிறுவனம் சமீபத்தில் டெஸ்ட் போட்டி வீரர்களுக்கான சர்வதேச தரப்பட்டியலை வெளியிட்டது. இதில் ராவிட் மற்றும் முரளிதரன் ஆகியோர் முதலிடம் பெற்றுள்ளனர்.

துடுப்பாட்டவீரர்களுக்கான தர வரிசையில் முதலிடம் பிடித்த ராவிட் 892 புள்ளிகளையும், 58.09 சராசரியையும் பெற்றிருக்கிறார்.



பந்துவீச்சாளர்கள் வரிசையில் முத்தையா முரளிதரன் 886 புள்ளிகளுடன் 22.76 சராசரியைக் கொண்டிருக்கிறார்.

இதற்கு முன்னதாக துடுப்பாட்டவீரர்கள் வரிசையில் மேற்கிந்தியத்தீவுகளின் கப்டன் பிரைன் லாரா இருந்தார்.

ஆனால், இங்கிலாந்தின் லோர்ட்சில் நடைபெற்ற போட்டியில் அவர் சிறப்பாக விளையாடாததால், முதலிடத்தை இழக்க வேண்டியதாயிற்று.

**பந்துவீச்சாளர்கள் தரவரிசை**

1.முத்தையா முரளிதரன் (886), 2.ஹர்மிசன் (864), 3.பொலக் (837), 4.சொகைப் அக்தர் (826), 5.மெக்ரா (805), 6.வோர்ன் (762), 7.கும்ப்ளே (751), 8.ஜிலெஸ்பி (740), 9.என்ரினி (722), 10.ஹர்பஜன்சிங் (635).

**துடுப்பாட்டவீரர்கள் தரவரிசை**

1.ராகுல் ராவிட் (882), 2.ஹெய்டன் (889), 3.லாரா (881), 4.கலிஸ் (833), 5.பொன்டிங் (832), 6.கிப்ஸ் (815), 7.இன்ஸமாம் (785), 8.டெண்டுல்கர் (784), 9.ஷேவாக் (782), 10.ரிச்சட்சன் (761).

******* இன்னும் 13 நாட்களில் ******

நமது ஈழநாடு ஒலிம்பிக் 2004

விளையாட்டு

# ஒரே ஓவரில் 17 முறை பந்துவீசிய முகமட் சமி!



(கொழும்பு)

பங்களாதேஷுக்கு எதிராக நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் பந்துவீச்சாளர் முகமட் சமி மொத்தம் 8.2 ஓவர்கள் பந்துவீசி 38 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

சமி தனது முதல் ஓவரை ஓட்டம் எதையும் கொடுக்காமல் மெய்டனாக பந்துவீசி முடித்தார்.

2 ஆவது ஓவரில் அவர் மொத்தம் 17 முறை பந்துவீசினார். 7 வைற் போல், 4 நோபோல் என மொத்தம் 17 முறை பந்துவீசிய சமி - அந்த ஓவரில் மொத்தம் 22 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி வீரர் ஹசிபுல் ஹுசைன் ஒரு ஓவரில் 14 முறை பந்துவீசியதே இதுவரை அதிகமாக இருந்தது. அதைத் தற்போது முகமட் சமி 17 முறை வீசி மோசமான சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

# இந்திய - பாகிஸ்தான் அணிகள் ஓகஸ்ட் 21 இல் மோதும்!

ஹொலன்டில் முதல்முறையாக 3 நாடுகள் பங்கேற்கும் சர்வதேச கிரிக்கெட் போட்டி நடத்தப்படுகிறது.

இந்தப் போட்டி அடுத்தமாதம் 21 ஆம் திகதிமுதல் 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் உலக சம்பியனான அவுஸ்ரேலியா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பங்கேற்கவிருக்கின்றன.

இந்தப் போட்டியில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோதும். புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறும்.

21 ஆம் திகதி நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன. இந்திய அணி அவுஸ்ரேலிய அணியை 23 ஆம் திகதி எதிர்கொள்ளும். இறுதிப்போட்டி 28 ஆம் திகதி நடைபெறும்.

இந்தப் போட்டி முடிந்த பிறகு இந்திய அணி இங்கிலாந்து சென்று 3 ஒருநாள் போட்டியில் விளையாடும்.


அதைத் தொடர்ந்து அங்கு நடைபெறும் ஐ.சி.சி சம்பியன் போட்டியில் விளையாடும். இந்த 3 போட்டிகளுக்கான இந்திய அணி 10 ஆம் திகதி அறிவிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

ஹொலன்டில் நடைபெறும் 3 நாடுகள் போட்டி விபரம் வருமாறு -

ஓகஸ்ட் 21: இந்தியா - பாகிஸ்தான், ஓகஸ்ட் 23: இந்தியா - அவுஸ்ரேலியா, ஓகஸ்ட்25: பாகிஸ்தான்-அவுஸ்ரேலியா, ஓகஸ்ட் 28: இறுதிப் போட்டி.


## மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான

# இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 313 ஓட்டங்கள்



மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 5 விக்கெட் இழப்புக்கு 313 ஓட்டங்களைப் பெற்றது.

எக்பஸ்ரன் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான டெஸ்ட் போட்டியில் நாணயச்சுழற்சியில்





வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இங்கிலாந்து அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் ட்ரஸ்கோதிக் - ஸ்ரரஸ் ஜோடி சிறப்பாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தது.

அணி 77 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஸ்ரரஸ் 24 ஓட்டங்களைப் பெற்றநிலையில் லோர்சனின் பந்துவீச்சுக்கு ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த றொபட் கீயும் 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் கொலின்ஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து சென்றார்.





இங்கிலாந்து அணி 210 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அபாரமாக ஆடிக்கொண்டிருந்த ட்ரஸ்கோதிக் ஆட்டமிழந்தார்.

182 பந்துகளைச் சந்தித்து - 19 பவுண்டரிகளுடன் 105 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் இவர் பிராவோவின் பந்தை அடித்தபோது - லாறாவிடம் பிடிகொடுத்தார்.

அடுத்ததாக களம்புகுந்த அணித் தலைவர் வோகன் 12 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில்- பிராவோவின் பந்துக்கு ஆட்டமிழந்தார்.

தோர்ப் ஓரளவுக்கு நிலைத்து நின்று ஆடினாலும் - 10 பவுண்டரிகளுடன் 61 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கொலின்ஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை ஆட்டம் நிறுத்தப்பட்டபோது பிளின்ரொப் 42 ஓட்டங்களுடனும், ஜோன்ஸ் 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 5 விக்கெட் இழப்புக்கு 313 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

# ஜேர்மன் செஸ் போட்டி; ஆனந்த் சமநிலையில்!

ஜேர்மனி நாட்டில் உள்ள டார்ட் மென்ட் நகரில் முன்னணி வீரர்கள் கலந்துகொள்ளும் செஸ் போட்டி நடைபெற்றுவருகிறது. இதன் அரையிறுதியில் இந்திய கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் ஹங்கேரியைச் சேர்ந்த பீற்றர் லிகோவை எதிர்கொண்டார்.

முதல் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. 18 ஆவது காய் நகர்த்தலுக்குப் பிறகு இந்தப் போட்டி சமநிலையில் முடிந்தது. கிராம்னிக்-சுவிட்லா மோதிய அரையிறுதி ஆட்டமும் 45 ஆவது காய்நகர்த்தலுக்குப் பின்னர் சமநிலையில் முடிந்தது.

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வதிரி தேவரையாளி யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பி.ப 3 மணிக்கு -

சிவானந்தா விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது.

★ ★ ★ ★

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி பழைய மாணவர் உதைபந்தாட்ட அணிக்கும், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று பிற்பகல் 4 மணிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## தாச்சி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் 2004 ஆம் ஆண்டுக்கான மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டியில், சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று -

சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இணுவில் கலா ஜோதி விளையாட்டுக்கழகம் மோதும் போட்டி பிற்பகல் 4 மணிக்கும் -

மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் மோதும் போட்டி பிற்பகல் 5 மணிக்கும் நடைபெறவுள்ளன.

# நீர்

நீரே நீரே எம் நீரே
நாங்கள் பருகும் நன்னீரே
சுத்தமான நீரினால் நோய்கள் இன்றி
வாழலாம்.
கப்பல் பயணம் செய்யலாம்.
தாகம் தன்னைத் தீர்க்கலாம்.
புனிதமான நீரினால் பாவம் தன்னை
தீர்க்கலாம்.
இறைவன் தந்த கொடையே நீ
இயற்கை தந்த வளமே நீ
சுவையே இல்லா நீரே நீ
நிறமே இல்லா நீரே நீ
உருவம் இல்லா நீரே நீ
உடலுக்கு உகந்த நீரே நீ
உலகில் உயிர்கள் வாழ்ந்திட
உனது உதவி தேவையே
உலகில் சிறந்த வளமே நீ
உன்னை அசுத்தம் ஆக்கினால்
நாங்கள் வாழ முடியுமா?
உனது பயன்கள் பலவற்றை
நாங்கள் பெற்று வாழ்கின்றோம்.
உன்னால் இயக்க சக்தியை
நாங்கள் பெற்றுக் கொள்கின்றோம்.
உன்னை நம்பி விவசாயி
விவசாயத்தை செய்கின்றான்.
ஆறு, கிணறு, ஏரிகளில்
உன்னை நாங்கள் பெறுகின்றோம்
நாங்கள் பருகும் நீரே நீ
சுத்தமான நீரே நீ -

**தரம் - 6**
**யாழ். இந்துக் கல்லூரி**
**மாணவர்கள்**

# புதிர்

1. 40 மீற்றர் நீளமுள்ள குழாய் இரண்டாக உடைந்து விடுகிறது. உடைந்த குழாய்களில் சிறியதைவிடப் பெரியது ஒரு மீற்றர் நீளமாக உள்ளது. அப்படியானால் சிறிய குழாயின் நீளம் எவ்வளவு?

2. மனோகரின் அப்பா ஒரு கலர் பென்சில் பெட்டி வாங்கி அவனுக்குக் கொடுத்தார். அவன் அந்தப் பென்சில்களை இரணடு இரண்டாகப் பிரித்துப் பார்த்தால், ஒன்று மிஞ்சியது. மூன்று மூன்றாகப் பிரித்துப் பார்த்தால், இரண்டு மிஞ்சியது. நான்கு நான்காகப் பிரித்துப் பார்த்தால், மூன்று மிஞ்சியது. அப்படியானால் மனோகரின் பெட்டியில் எத்தனை பென்சில்கள் இருந்திருக்கும்?

3. சில வண்ணத்துப்பூச்சிகள் ஒரு வீட்டினுள் பறந்து வந்தன. அந்த வீட்டில் இருந்த செடிகளில் இரண்டிரண்டு வண்ணத்துப்பூச்சிகள் உட்கார்ந்தால், ஒரு செடி மீதமிருக்கும். செடிக்கு ஒவ்வொரு வண்ணத்துப்பூச்சியாக உட்கார்ந்தால், ஒரு வண்ணத்துப்பூச்சிக்கு உட்கார இடமிருக்காது. அப்படியாயின் அந்த வீட்டில் எத்தனை செடிகள் இருந்தன? வீட்டுக்கு வந்த வண்ணத்துப் பூச்சிகள் எத்தனை?


## மூளைக்கு வேலை சென்றவார விடைகள்

1. 5
2. முதல் இரு எண்களின் பெருக் கத் தொகையிலிருந்து அவ்விரு எண்களின் கூட்டுத்தொகை கழிக்கப்பட்டு, மூன்றாவது எண் உருவாக்கப்பட்டுள்ளது. 29

# சித்திரக்கதை

## குறும்பு III







கதை, ஓவியம் - ந.யருன் (தொடரும்...)

# ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்குப் பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகுடன் வரைநது அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர்ப் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச் சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியஙகளை கீழ்வரும் கூப்பனைப் பூர்த்திசெய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்குப் பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேனீக்கள் கழகத்தினரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

| | |
|---|---|
| முழுப் பெயர் | :................................... |
| கற்கும் பாடசாலை | :................................... |
| கற்கும் தரம் | :................................... |
| வீட்டு முகவரி | :................................... |

| ........................... | ........ | ................. |
|---|---|---|
| அதிபர்/ஆசிரியர் ஒப்பம் | திகதி | மாணவர் ஒப்பம் |

**ஓவியப்போட்டி**
சிறுவர் அரங்கம்
**நமது ஈழநாடு**
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# விடுகதைகள்

1. விடிய விடியப் பூந்தோட்டம், விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம். அது என்ன?
2. மூன்று தம்பிக்கு ஒரே தொப்பி. அது என்ன?
3. ஒரு கால் மனிதனுக்கு, வயிறு நிறைய முட்டை. அது என்ன?
4. கறுத்தப் பாறையில் வெளுத்த வேர் இரண்டு. அது என்ன?
5. அக்கா தங்கை உறவுண்டு, அடுத்தடுத்த வீடு உண்டு, கிட்டக்கிட்ட வந்தாலும், தொட்டுக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் யார்?

## சென்றவார விடைகள்

1.செருப்பு - மின்விசிறி
2.அலாரம் - தீ விபத்து
3.வைத்தியர் - நுளம்பு
4.தேங்காய் - கண்ணாடி
5.கண்ணாடி





**சிந்தனைக்கு!**
*மிகச் சிறிய வேலையாயிருந்தாலும், முழு நிறைவே நோக்கமாயிருத்தல் வேண்டும்.*

# சிறுவர் அரங்கம்

# குட்டி முயலார்

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

வீட்டுக்குச் செல்லும் வழியிலே குட்டி முயலார் ஒரு காக்கையாரைச் சந்தித்தார்.



முயலாரே முயலாரே பொல்லாத ஓநாய் ஒன்றை இந்த வழியில் நான் பார்த்தேன். கவனமாக வீட்டுக்குச் சென்றிடும் என்று சொல்லி எச்சரித்தார்.

காக்கையாருக்கு நன்றி சொல்லி விட்டு, வீட்டை நோக்கி விரைந்து ஓடினார் குட்டிமுயலார்.

செல்லும் வழியிலே காக்கையார் சொன்னது போலவே ஒரு பொல்லாத ஓநாய் - குட்டிமுயலாரை வழிமறித்தது. குட்டிமுயலாரைப் பார்த்துத் தனது கத்தி போன்ற கூரான பற்களைக் காட்டிச் சிரித்தது பொல்லாத ஓநாய்.



ஓநாயைக் கண்ட குட்டி முயலார் - பயம் கொண்டார். கையிலே வைத்திருந்த பழப் பையைக் கீழேபோட்டு விட்டு, ஓட்டம் பிடிக்க நினைத்தார். குட்டிமுயலே, குட்டிமுயலே பயபபடாது என்னருகே வந்திடு. நான் உனது நண்பனே என்று கனிவாகச் சொல்லியது பொல்லாத ஓநாய்.

ஓநாயின் ஏமாற்றுப் பேச்சைக் குட்டிமுயலார் கொஞ்ச மும் நம்பவில்லை. பொல்லாத அந்த ஓநாயிடமிருந்து தப்பித்துக் கொள்ளுவது எப்படி என்று யோசித்தார் குட்டிமுயலார். தனது பேச்சை நம்பவில்லை என்பது தந்திரக்கார ஓநாய்க்கு நன்றாக விளங்கியது.

குட்டிமுயலாருடன் சிரித்துப் பேசுவதில் பயன் ஏதுமில்லை என்று முடிவு செய்த பொல்லாத ஓநாய் - குட்டிமுயலாரை நோக்கி வேகமாகப் பாய்ந்தது.



தரையில் கிடந்த சாக்குப் பையைக் கையில் எடுத்துக்கொண்டார் குட்டி முயலார். முயலாரை நோக்கிப் பாய்ந்து வந்த பொல்லாத ஓநாயின் தலை, முயலார் தனது கையில் தயாராக வைத்திருந்த சாக்குப் பையினுள் வசமாக மாட்டிக்கொண்டது.

சாக்குப் பையினுள் தலை மாட்டிக்கொண்டதால், மூச்சுத் திணறித் தவியாய்த் தவித்தது பொல்லாத ஓநாய்.

குட்டிமுயலே, எனது நணபனே மூச்சுத் திணறித் தவிக்கும் எனக்கு - விரைந்து உதவி செய்திடு என்று குட்டி முயலாரி டம் இரந்து கேட்டது



தந்திரக்கார ஓநாய். ஓநாயே, நீ எனது நண்ப னல்ல - கொடியவன். உன்னைப் போன்ற கொடியவர்களுக்கு உதவி செய்வதே பாவம் என்று சொன்னார் குட்டி முயலார்.

பொல்லாத ஓநா யிடமிருந்து தப்பி வீட்டுக்கு வந்து சேர்நதார் குட்டிமுயலார். பசியோடு இருக்கும் அம்மாவுக்கும், தம்பிகளுக்கும் சாப்பிடக் கொடுக்கப் பழங்களை எடுத்து வர முடியவில்லையே என்று நினைத்துக் குட்டிமுயலார் மிகவும் கவலைப் பட்டார்.



பொல்லாத ஓநாய் மேல் - குட்டி முயலார் கடும் கோபம் கொண்டார்.



குட்டிமுயலார் வீட்டுக்குத் திரும்பி வந்ததால், அம்மா முயலார் அடைந்த சந்தோஷத்துக்கு அளவேயில்லை. ஓடிச்சென்று தனது அருமை மகனைக் கட்டித் தளுவிக்கொண்டார். குட்டிமுயலாரின் தம்பிகளும் மகிழ்ச்சியோடு துள்ளிக் குதித்தார்கள். முயல தம்பி, முயல் தம்பி விரைந்து சென்று ஈரத்தைத் துடைத்திடு என்று அம்மா முயலார் மகனிடம் சொன்னார். வீட்டுக்குத் திரும்பி வரும் வழியில் நடந்ததை எல்லாம் அம்மாவிடம் சொன்னார் குட்டிமுயலார். பொல்லாத ஓநாயைப் பற்றிக் குட்டிமுயலார் சொல்லியதைக் கேட்ட அம்மா முயலார் பயந்து போனார்.

சாப்பிடுவதற்குப் பழங்களைத் தன்னால் எடுத்து வர முடியவில்லையே என்று சொல்லிக் கவலைப்பட்ட குட்டிமுயலாருக்கு ஆறுதல் சொன்னார் அம்மா முயலார். பழங்கள் இப்போது முக்கியமல்ல எனது அருமை மகனே பொல்லாத ஓநாயிடமிருந்து தப்பி, நீ வீடு வந்ததுதான் எனக்குப் பெரிய விடயம் என்று, கண்கள் கலங்கிடக் குட்டி முயலாரைப் பார்த்துச் சொன்னார் அம்மா முயலார்.

(தொடரும்...)

**- யோ.சத்தியன்**

31.07.2004
நமது ஈழநாடு - சனிக்கிழமை

# அன்புள்ள சிறுவர்களே!

வாசிப்புப் பழக்கத்தைக் கைக்கொள்வது மாணவர்களாகிய உங்களுக்கு அவசியமான ஒன்று. உலகில் அறிவு - அறிவியற் பெருக்கம் வேகமாக நிகழ்கிறது. எனவே, பாடப்புத்தகங்களுக்கு மேலதிகமாகச் சஞ்சிகைகள், கதை, அறிவியல் சார்ந்த புத்தகங்கள், பத்திரிகைகள் போன்றவற்றை வாசிப்பது நன்மையளிக்கும்.

நீங்கள் சிறு பராயத்திலிருந்தே வாசிப்புப் பழக்கத்தை ஆரம்பிக்கும் பொழுது, அந்தப் பழக்கமானது படிப்படியாக வளர்ந்து நீங்கள் பெரியவர்களாகும் பொழுது உங்களுக்குப் பயன்தரும். எத்தனையோ புத்தகக் கடைகள் இருக்கின்றன. உங்களுக்குப் பிரயோசனமான, உங்களுக்கு ஏற்ற புத்தகங்கள், சஞ்சிகைகள் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். உங்களால் விலைக்கு வாங்கக் கூடிய மலிவான புத்தகங்களும் இருக்கும். மாதமொரு முறை பணத்தை சிறிது சிறிதாக சேமித்து, உங்களுக்கென்று புத்தகங்களை வாங்கி வாசிக்கலாம்.

பாடசாலை நூலகம் - நீங்கள் வசிக்கும் பிரதேச சபை நூலகங்களுக்குச் சென்றும் வாசிக்க முடியும். அங்கு நிறைய வித்தியாசமான புத்தகங்கள் இருக்கும். உங்களுக்கு விருப்பமான புத்தகங்களை எடுத்து வாசிக்கலாம். வீட்டுக்கும் கொண்டுசெல்ல முடியும்.

வெவ்வேறு விடயங்கள் பற்றி, அறிய அறிய ஆர்வம் ஏற்படும். பின்பு அந்த ஆர்வம் வாழ்நாள் முழுவதும் உங்களுடன் இருக்கும். வாசிப்பதால் ஏற்படும் பயன்களை, வாசிக்கத் தொடங்கிய சில நாட்களிலேயே நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்.

பாசமுடன் - சாரு அக்கா

# கூடி விளையாடு

*சென்றவாரத் தொடர்ச்சி...*

கே.வீ.குணசேகரம்

‘இனி நான் குருவிகளைப் பிடிப்பேன்
சுவைத்துத் தின்பேன்’



‘குருவிகளைப் பிடித்தால் உன்னைக் கடிப்பேன்’
சில நாட்கள் சென்றன
அருணன் குருவிகளுக்கு
தானியங்களைப் போட்டான்
ஒரு குருவியைக் காணவில்லை
மிகவும் அழகான குருவி அது
அருணனுக்கு அதன் மேல் கொள்ளை ஆசை
மறுநாள் வரும் என்று எதிர்பார்த்தான்
நாட்கள் கழிந்தன
குருவி வரவில்லை
இரவானதும் வீமனை அவிழ்த்து விட்டான்
வீமனுக்கு சரியான துக்கம்
அன்று இன்னொரு குருவி
குறைந்திருந்தது
அருணன் கவலைப்பட்டான்
‘வீமனுக்கு வருத்தம் அப்பா’
‘இன்று அதைக் கட்டாதை அருணன்’
வீமன் வேப்பமரத்தடியில் படுத்திருந்தது
குருவிகள் முற்றத்தில் நின்றன
கதிர் பதுங்கிப் பதுங்கி வந்தது
வீமன் நிமிர்ந்து பார்த்தது
கதிர் குருவியைப் பிடித்தது
வீமன் பாய்ந்து கதிரைக் கடித்தது
அருணன் வெளியே ஓடிவந்தான்
பூனையின் வாயில் ஒரு குருவி இருந்தது
வீமன் கதிரைக் கவ்வியது
குருவி முற்றத்தில் துடிதுடித்தது
வீமன் கதிரைக் கடித்தது.
அருணனுக்கு உண்மை தெரிந்தது.
‘விடுடா வீமா...’
வீமன் அருணனைப் பார்த்தது.
‘இரண்டு குருவிகளையும் கதிர் தான் பிடித்தது’
‘நான் தவறாக நினைத்து விட்டேன்’
‘மன்னித்துக் கொள்ளடா’
‘நீ நல்ல பிள்ளை இனிமேல் நான் தவறாக நினைக்கமாட்டன்’
வீமன் மகிழ்வுடன் வாலை ஆட்டியது.

(தொடரும்...)

# எனது செல்லப்பிராணி



சி.நிறோஜன்
தரம் 4
யாழ்ப்பாணக் கல்லூரி

எனது செல்லப்பிராணி கிளி ஆகும்.
எனது செல்லப்பிராணியின் பெயர் ராணி.
ராணி மிகவும் அழகான பறவை.
அது கனிவகைகளை விரும்பி உண்ணும்.
எனது ராணியை பொந்தில் பிடித்தேன்.
ராணி நான் கதைத்தால் அதுவும் என்னுடன் சேர்ந்து கதைக்கும்.
எனது செல்லப்பிராணியில் எனக்கு விருப்பம்.

# உங்கள் கைவண்ணம்



பு.சுமித்திரா - தரம் -9
துப்பிளோன் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்



ப.கஜேந்திரன்
தரம் - 9,
துப்பிளோன் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்

# உலக சாதனை



நீண்டகாலம் சிறையில் அடைக்கப்பட்டு, விடுதலையாகிய பின்னர் தென்னாபிரிக்காவின் முதலாவது குடியரசு ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் நெல்சன் மண்டேலா. இவர் 1964 ஆம் ஆண்டிலிருந்து 1990 ஆம் ஆண்டு வரை 27 வருடங்கள் சிறையில் கழித்தவர். 1994 ஆம் ஆண்டு வைகாசி 10 ஆம் திகதி தென்னாபிரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

இங்கே மடிக்கவும்



# உண்மை ஆனால் அதிசயம்

1. முதற் தபால் அட்டை:-
தபால் அட்டைகளை முதலில் உபயோகித்த நாடு அவுஸ்ரேலியா.

2. மஞ்சள் குருவி :-
மஞ்சள் இறக்கைகளைக் கொண்ட இந்தக் குருவி வெட்டுக்கிளியின் குரலைப் போல் சத்தம் செய்யும். அந்த ஒலியால் வசீகரிக்கப்பட்டு, அதை நெருங்கும் வெட்டுக்கிளியை ஏமாற்றிப் பிடித்து, இந்தக் குருவி உண்ணும்.

3. இடப்பெயர்ச்சி :-
மிருகங்கள், பறவைகளின் இடப்பெயர்ச்சி ஆச்சரியமானது. மனித அறிவுக்கு எட்டாதது. ஐரோப்பாவில் குக்கூ பறவைகள் முட்டை இடும். முட்டைகளைக் காக்கும் பொறுப்பு - வளர்ப்புப் பெற்றோரான காக்கையிடம் விடப்படும். ஜூலை மாதத்தில் பெரிய பறவைகள் தெற்கு நோக்கிப் பறந்து, ஆபிரிக்காவை அடையும். முட்டையிலிருந்து வெளிவரும் குக்கூ பறவைக் குஞ்சுகள் - ஓகஸ்ட் மாதத்தில் கிளம்பி, தெற்கு நோக்கித் தாமாகவே வழி கண்டு பிடித்து, ஆபிரிக்காவை வந்தடையும்.

5
யூகலிப்டஸ்:-




காட்டுத் தீ பற்றினால், யூக லிப்டஸ் மரம் - வெடிகுண்டைப் போல் வெடிக்கும். அந்த மரத் தில் இருக்கும் யூகலிப்டஸ் எண் ணெய்க்கு வெடிக்கச் செய்யும் தன்மை உண்டு.

6. மனித மூளை:-
10 வாட் மின்சார மின்குமிழுக்குச் சமமான திறனை மனித மூளையும் உபயோகப்படுத்துகிறது. எம்முடைய இடது பக்க மூளை - உடலின் வலப்புற உறுப்புக்களை இயக்குகிறது. அதேபோல் வலப்பக்க மூளை இடப்புற உறுப்புக்களை இயக்குகிறது.

7. விஞ்ஞான ஆராய்ச்சி:-
விஞ்ஞான ஆய்வுகூடங்களில் ஆபத்தை அறிவிக்கப் பயன்படுவது - சிவப்பு நிறமல்ல. கடும் மஞ்சள் நிறமாகும்.

8. மின்னல்:-
ஒரே இடத்தில் மின்னல் இருமுறை தாக்காது. எல்லா வகை மின்சாரமும் பாய்வதுபோல மின்னலும் குறைந்த அளவு எதிர்த்து நிற்கும் வழியாகவே செல்லும்.



# சரியான உருவத்தை இணையுங்கள்




# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க ‘இளந் தேனீக்கள்’ கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :....................................
:....................................

................ ..............................
திகதி ஒப்பம்

.............................. ..............................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

# எமது மாவீரர்களின் தியாகத்தாலேயே பலம்பொருந்திய படையாக விளங்குகிறோம்

## மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்

(மட்டக்களப்பு)

எமது மாவீரர்களின் தியாகத்தினாலே நாம் பலம் பொருந்திய படையணியாக விளங்குகின்றோம் என்று, மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் நடைபெற்ற கப்டன் அன்பரசியின் ஒன்பதாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் கலந்துகொண்டு, சிறப்புரை ஆற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரை நிகழ்த்துகையில் -மாவீரர்களின் அர்ப்பணிப்பும், தாயக விடுதலை உணர்வுமே நாளைய தாயக விடுதலைக்கு வழி சமைக்கும் என்றும்- மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில் முன்னதாக பொதுச் சுடரின் கல்விக்கழகப் பொறுப்பாளர் விமல்ராஜ் ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியை தளபதி பிரபா ஏற்றினார்.

கப்டன் அன்பரசியின் திருவுருவப்படத்துக்கு அவரது தாயார் மலர் மாலை அணிவித்தார்.

மட்டக்களப்பு - அம்பாறை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் குவேனி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த்தேசிய கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன், பிரதேச செயலர் அமலநாதன் உட்பட போராளிகள், மாணவர்கள், பொது மக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

# தென்மராட்சி நெசவு நிலையங்களை மீள இயக்குவதற்கு நடவடிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் முன்னர் இயங்கி, கடந்தகால யுத்த அனர்த்தங்களின்போது- சேதமடைந்து இயங்காதுள்ள நெசவு நிலையங்களில் சிலவற்றை மீள இயக்குவதற்கு தொழிற்துறை திணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இதன்படி முதற்கட்டமாக நல்ல நிலையிலுள்ள இரு நிலையங்களைத் தெரிவுசெய்து, இரண்டு நிலையங்களுக்கும் தலா 15 பயிற்சியாளர் வீதம், பேர் விபரங்களுடன் அறிவித்தால், அவர்களுக்கு நாளாந்தம் 50 ரூபா ஊக்குவிப்பு படியாக வழங்கவும், கட்டடம் வாடகைக்குப் பெறவேண்டியிருப்பின் அதற்கான வாடகையை வழங்கவும் தாம் தயாராக இருப்பதாக தொழிற்துறைத் திணைக்களப் பணிப்பாளர் ஆர்.விசுவலிங்கம் தெரிவித்தார்.

தறிகள் தேவைப்படுமிடத்து யாழ். மாவட்ட அலுவலர் திருமதி. பெனராஜூடன் தொடர்புகொண்டு பெறுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் இது தொடர்பான முயற்சிகளை மேற்கொண்டு ஆரம்பித்தால், படிப்படியாக ஏனைய நிலையங்களையும் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (24)

# அச்சுறுத்தலின் மத்தியிலும் ஊடகவியலாளர்கள் அர்ப்பணிப்புகளுடன் செயற்படுகின்றார்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உண்மையை வெளிப்படுத்தும் தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகவுள்ள போதிலும், அவர்கள் தேச விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டு மாணவர் [illegible] கல்வி நிலையை உயர்த்[illegible]து தொடர்பாக நேற்று முன்தினம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது -

யாழ். மாவட்ட மாணவர்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்து வருகின்றமை அனைவரின் மத்தியிலும் கவலையை ஏற்படுத்தியிருக்கின்றது.

வசதிகள் குறைந்த கிளிநொச்சி மாவட்டத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்திலும் மாணவரின் கல்வித்தரம் உயர்ந்து செல்கையில், யாழ்.மாவட்டத்தில் மாணவர்கள் திசை திருப்பப்படுகின்றமை தமிழ் மக்களின் அறிவியல் ஆன்மீக [illegible]களை ஒடுக்கும் நடவடிக்கையாகும். இதனை வெற்றிகொள்ள வேண்டியது தமிழர்களின் மிகமுக்கிய கடமையாகும்.

இளஞ்சந்ததியினரைக் காக்கும் கடமையில், ஊடகங்கள் மிகுந்த அக்கறையுடன் தீவிரமாகச் செயற்படவேண்டும்.

எமது பிரதேசத்தில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகவே உள்ளது. இருந்தபோதிலும் தமிழ் தேசியத்தைக் கட்டி எழுப்பவதற்கு அவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயற்படுகின்றனர்.

தேசவிடுதலையின் அடிக்கல்லாகச் செயற்பட்டமையால், ஊடகவியலாளர்கள் எதிர் கொண்ட சிக்கல்கள் மிகவும் கடினமானவை. அதனை எமது தேசம் என்றும் மறவாது. தொடர்ந்தும் மனம் தளராது, விலை போகாது எமது உரிமைக்காக ஊடகவியலாளர்கள் குரல் கொடுக்க வேண்டும் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ப)

## அவசர கலந்துரையாடல்

யாழ். மாவட்ட உயர்தேசியப் கணக்கியல், வர்த்தக பட்டதாரிகள் சங்கத்தினருக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

வேலை வாய்ப்புத் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால், அனைத்து உயர் தேசிய கணக்கியல், வர்த்தக பட்டதாரிகளையும் இதில் கலந்துகொள்ளுமாறு சங்கத்தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகள்

# ஆட்டுப்பட்டி கிராமத்தில் மக்களுடன் கலந்துரையாடல்

யாழ். மாவட்ட தமிழர் புனர் வாழ்வுக்கழக அனுசரணையுடன், நிகொட் திட்டத்தின் கீழ் முதன் முதலாக புனரமைப்பு செய்யப்பட்ட துன்னாலை, ஆட்டுப்பட்டிக் கிராமத்தை நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் ஆசிய அபிவிருத்தி வங்கிப்பிரதி நிதி பிறைன் - சிமித் நேரடியாகச் சென்று பார்வையிட்டு, அந்தக் கிராம மக்களுடன் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின் போது வடக்கு-கிழக்கு சமூக அபிவிருத்தி நிகொட் திட்ட இணைப்பாளர் பாலச்சந்திரன், ஆசிய அபிவிருத்தி வங்கி உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மனோகரன், நிகொட் பிரதித்திட்டப் பணிப்பாளர் நவரட்ணராஜா, நிகொட் சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் கெங்காதரன், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மாவட்ட பணிப்பாளர் ஜெயராஜ் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழக, நிகொட் திட்ட யுனிசெவ் பணியாளர்களும், ஆட்டுப்பட்டி கிராம மக்களும் கலந்துகொண்டனர்.

# மூவிங்மொண்ட் அதிகாரிகள் யாழ். குடாநாட்டுக்கு விஜயம்

இத்தாலி நாட்டைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் மூவிங் மொண்ட் நிறுவன அதிகாரிகள் குழு ஒன்று, நேற்றுமுன்தினம் யாழ். குடாநாட்டுக்கு விஜயத்தை மேற்கொண்டு, தமது அமைப்பின் செயற்திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

மூவிங் மொண்ட் நிறுவனத் தெற்காசிய இணைப்பாளர் கார்லா பிறட்டிசி புதிய நாடுகளில் திட்டங்களை அமுல்படுத்தும் இணைப்பாளர் ரீனோ சிப்பியானி ஆகியோர் அடங்கிய குழுவினரே குடாநாட்டுக்கு வருகை தந்து நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் காலை விமானம் மூலம் பலாலி விமானப் படைத்தளத்துக்கு வந்திறங்கி, காலை 11 மணியளவில் யாழ். செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளையைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இவர்கள் இங்கு உதவிகளற்று விவசாயம், தச்சுத் தொழில், மேசன் தொழில் ஆகியவற்றில் ஈடுபடும் மக்களுக்கு, கிணறுகள் புனரமைத்தல், சுயதொழிலான கோழி வளர்ப்பு போன்றவற்றை ஊக்குவிக்க உதவிகள் மேற்கொள்ளவுள்ளனர்.

இவ்வாறு தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சங்கானை, பருத்தித்துறை ஆகிய பகுதிகளைத் தெரிவு செய்துள்ளனர்.

தமது செயற்திட்ட ஆய்வுகளை யாழ். குடாநாட்டில் தங்கியிருந்து இவர்கள் மேற்கொண்டனர்.





“சுகவாழ்வுக்கான பயணம்” அமைப்பினரால் சுகவாழ்வு நிலையத்தில் நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறையை யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி சோபியா ஆரம்பித்து வைப்பதையும, கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (111)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
இரண்டாவது அகவையில்



பெயர் : பி.லக்ஷிகா
முகவரி : 66/2, பழம் வீதி.

வாழ்க வளமுடன்
சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன்

### யாழ். நகரத்தில்

# மூன்று ஆலயங்களின் விக்கிரகங்கள் திருட்டு

(வண்ணை)

யாழ். நகரில் மூன்று ஆலயங்களில் விநாயகர் விக்கிரங்கள் கடந்த செவ்வாய்கிகழமை இரவு இனந்தெரியாதோரால் திருடப்பட்டதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வண்ணை வீரகத்தி விநாயகர் ஆலயம், பிறவுண் வீதி நீராவியடி விநாயகர் ஆலயம், கலட்டிச் சந்தி ஐயனார் ஆலயம் ஆகியவற்றில் இருந்த விநாயகர் விக்கிரகங்களே திருடப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் ஆலய விக்கிரகங்கன் திருடப்படுவது அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (111)

# யாழ். மாநகர சபைக்கு புதிய ஆணையாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் ஆணையாளர் திருமலையிலுள்ள மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

யாழ். மாநகர சபையின் ஆணையாளராகக் கடமையாற்றிய இ.இராமலிங்கம் நேற்றிலிருந்து மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

தற்பொழுது தெல்லிப்பளைப் பிரதேச செயலராகக் கடமையாற்றி வரும் கலாநிதி குணராஜா மாநகர சபையின் புதிய ஆணையாளராக கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி சுகாதார பாதுகாப்பு நடவடிக்கை

உள்ளூராட்சி வாரத்தையொட்டி நல்லூர்ப் பிரதேச சபையினரால், சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீட்டுக்கிணறுகள், பொதுக் கிணறுகள் போன்றவற்றுக்கு குளோரின் போடப்பட்டுள்ளன.

செம்மணி, காரைக்கால், திருநெல்வேலி, கொக்குவில் ஆகிய பகுதிகளில் உள்ள பொது மயானங்கள் அந்தப் பகுதிகளில் பொதுமக்களின் உதவியுடன் சிரமதானம் மூலம் புனரமைக்கப்பட்டுள்ளன.

இதேபோல கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு, மரம் நடுகைத்திட்டம் போன்றனவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதேவேளை கடந்தவாரம் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியினால், கோண்டாவில் இந்து மகாவித்தியாயத்திலும் டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக மாணவர்களுக்குக் கருத்துரை வழங்கப்பட்டது. (ப)

வார நோக்கு


யாழவன்

# சாதாரண மக்களின் வாழ்வியல் தொடர்பாக அரசு முடிவெடுக்கவேண்டிய நிலையிலுள்ளது



மீண்டுமோர் கொடிய போர் மூளு வதற்கான அறிகுறிகள் நாட்டிலே தோன்றிவிட்டன. இதுவரை காலமும் சமாதானப் பணிகளிலே அனுசரணையாளர்களாக மிகவும் பொறுமையுடனும், விட்டுக் கொடுப்புடனும் செயற்பட்டு வந்த நோர்வே அரசும் பொறுமை இழந்துவிட்டது. அரசின் அசமந்தப் போக்கும், போர் வெறியும் நோர்வேயின் உள்ளத்திலும் வெறுப்பை தோற்றுவித்துவிட்டது.

கடந்தவாரம் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெலல் கிசன் முக்கியமான கருத்தொன்றை வெளியிட்டுள்ளார். அரசாங்கம் நெருப் புடன்



விளையாடுகிறது. அதன் விளைவு பாரிய அழிவுகளாகத்தான் இருக்கும் என சர்வதேச சமூகத் தின் அனேகமானோர் உணர்ந்துள்ள, சாதாரண மக்கள் வெளிப்படுத்தி வரும் ஒரு கருத்தையே விடர் ஹெலல் கிசன் உத்தியோக பூர்வமாக வெளியிட்டுள்ளார்.

ஆனால், இந்த கருத்தையோ அதன் தாக்கத்தையோ அரசும், அதற்கு அனுசரணை புரிந்து வரும் வல்லரசுகளோ கருத்தில் கொள்வதாகவில்லை. இலங்கையின் அழிவிலே லாபம்தேட முனையும் இந்தியாவும், அமெரிக்காவும் மீண்டும் மீண்டும் இலங்கை அரசுக்கு போர் வெறியையே ஊட்டி வருகின்றன.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இந்தப் பத்தியில் அமெரிக்கா போர் கப்பலொன்றை கொடுத்து விட்டது. இந்தியா பதிலுக்கு என்ன செய்யப்போகிறது என்ற கேள்வியை எழுப்பியிருந்தோம். அதற்குப் பதிலாக, இப்போது இந்தியாவும் ஓர் போர்க்கப்பலை இலங்கை அரசுக்கு வழங்கவுள்ளதாகவும் அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் இலங்கை அரசின் அமைச்சர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அண்டை நாடாக இருக்கும் இந்தியாவுக்கும் இலங்கையிலே அமைதியை தோற்றுவிப்பதிலே அதிக பங்கெடுக்க வேண்டிய கட்டாயமுண்டு. ஏனெனில், இலங்கையின் அமைதி இந்தியாவிலும் அமைதியை தோற்றுவிக்கும். இலங்கை தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தால் இந்தியாவும் தொடர்ந்து எரியும் என்பது தான் உண்மை.

ஆனால், இந்திய அரசோ இந்த யதார்த்தத்தை புரிந்து கொள்ளாமல் தனது அணுகு முறைகளிலே எதுவித மாற்றத்தையும் கொண்டு வராமல் செயற்பட்டு வருகிறது. உலகத் தமிழர் மாநாட்டுக்காக சென்னை சென்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி. மா.க. ஈழவேந்தனை விமான நிலையத்தில் வைத்தே இந்திய அதிகாரிகள் திருப்பி அனுப்பியுள்ளார்கள். இது ஈழவேந்தனுக்கு மட்டுமன்றி ஈழத்தமிழ் மக்கள் அனைவருக்குமே அதிர்ச்சியையும் கவலையையும் அவமரியாதையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஈழவேந்தன் திருப்பி அனுப்பப் பட்ட சம்பவத்திற்கு பின்னர் நிறையவே சிந்திக்க வேண்டியுள்ளது. ஒரு சமயம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இந்தியா்வின் இறைமையை மீறும் விதத்தில் செயற்பட்டு வந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு ஈழவேந்தன் நாடு கடத்தப்பட்டார். இன்று இந்தியா அதனை மறந்துவிடும் அல்லது மன்னித்துவிடும் எனும் நினைப்பிலே இந்தியா சென்ற ஈழவேந்தன் அவமதிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டதற்காக தம்மால் நாடு கடத்தப்பட்ட ஒரு தமிழனையே மன்னிக்க மறுக்கும் இந்தியா, உலகத் தமிழர்கள் எதிர்பார்ப்பதுபோல, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி, காழ்ப்புணர்ச்சியை மறந்து புலிகளுடன் கைகோர்க்குமா என்பது இன்று எழுந்துள்ள முக்கிய சந்தேகமாகும். இவ்வாறானதொரு எதிர்பார்ப்பு நிறைவேறுவதற்கான சந்தர்ப்பம் இல்லையென்பது போலவே இந்தியா செயற்பட்டு வருகிறது.

இந்தியாவினதும் அமெரிக்காவினதும் அணுகுமுறையினால் இலங்கையில் போர் வெடித்து மீண்டும் அழிவுகளும், இடப்பெயர்வுகளும் தொடர்கதையாகி அவல வாழ்வே கதியென ஈழத்தமிழர்களுக்கு இருக்குமானால், அந்த வரலாற்று பழியை இந்தியாவும், அமெரிக்காவுமே சுமக்க வேண்டிவரும். அது மட்டுமன்றி போரினால் விளையப் போகும் அழிவுகளை ஈடுசெய்ய வேண்டிய நிலைக்கும் இவ்விரு நாடுகளும் தள்ளப்படும்.

**அனுமன் இட்ட தீ இன்று வியாபித்து சுவாலைவிட்டு ஜே.வி.பி., ஹெல உறுமய மத்தியிலே இனவாதத் தீயாகவும், கருணாவின் உள்ளத்திலே துரோகத்தீயாகவும், கதிர்கமர், சங்கரி போன்றோர் உள்ளத்திலே சதித்தீயாகவும் எரியும்போது இலங்கைக்கு தீயினால் தானே அழிவு.**

மாற்றான் வீட்டிலே அமைதியை ஏற்படுத்த நோர்வே முயலும்போது அதற்கு தடையாக உள்வீட்டிலே ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. வெளியிலிருந்து இந்தியாவும், அமெரிக்காவும் முட்டுக்கட்டை போடுமாயின் ஒருபோதுமே இலங்கையிலே சமாதானம் ஏற்படப் போவதில்லை. பாவம் இலங்கை அனுமன் அன்று இட்ட தீ இன்று இங்கு அணையவில்லையென்பதே உண்மை.

அனுமன் இட்ட தீ இன்று வியாபித்து சுவாலைவிட்டு ஜே.வி.பி., ஹெல உறுமய மத்தியிலே இனவாதத் தீயாகவும், கருணாவின் உள்ளத்திலே துரோகத்தீயாகவும், கதிர்கமர், சங்கரி போன்றோர் உள்ளத்திலே சதித்தீயாகவும் எரியும் போது இல ங்கைக்கு தீயினால் தானே அழிவு. அதனால் தானோ ஹெலல்கீசனும் இலங்கை அரசு நெருப்புடன் விளையாடுகிறது என கூறியுள்ளாரோ! என்னவோ நடக்கப் போகிறது. அதன் விளைவு அழிவா? ஆக்கமா?

மேலும் நாம் இந்தமுறை இன்னொரு முக்கியமான விடயம் தொடர்பாகவும் இங்கு ஆராய வேண்டியுள்ளது. அதாவது எதுவித முன்னறிவித்தலுமின்றி அரசினால் இடைநிறுத்தப்பட்ட வறிய மக்களுக்கான உலர் உணவு நிவாரணவெட்டே அவ்விடயமாகும். இதுவும் எமது மக்களை பொறுத்தவரையிலே மிக முக்கியமான பிரச்சினையாகும்.

யாழ். குடாநாட்டிலுள்ள மக்களுள் அனேகமானோர் போரினால் பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ளனர். உயிர் இழப்புக்கள், உடைமை இழப்புக்கள் என இந்த மக்கள் ஏராளமான இழப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். அதற்கு மேலாகவும், இம்மக்களுள் அனேகமானோர் தமது தொழில் வாய்ப்புக்களையும், பொருளாதார வளர்ச்சியையும் இழந்து தமது அன்றாட உணவு தேவையை நிறைவு செய்யவே பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

இந்த நிலையிலுள்ள மக்களுக்கு அரசின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் வழங்கப்பட்டு வந்த இலவச உலர் உணவு நிவாரணம் பெரிதும் உதவியாக இருந்தது. வயிறார உண்ண இவ்உணவு போதுமானதாக இல்லாவிட்டாலும் வயிற்றை நனைக்க உதவியாயிருந்தது. ஆனால், அதுவும் தப்போது இடைநிறுத்தப்படும் அபாயநிலை தோன்றியுள்ளது.

கடந்த 2003ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை குடாநாட்டிலே 136,000 குடும்பங்கள் நிவாரணம் பெற்று வந்தனர். 2002ஆம் ஆண்டு வரை 1500 ரூபா இலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கே நிவாரணம் வழங்கப்படும் என்ற நிலைமை அதிகரித்த வாழ்க்கைச் செலவுகள் காரணமாக 2003ஆம் ஆண்டு 2500ரூபா இலும் குறைந்த வருமானமுடையோர் நிவாரணம் பெறலாம் என தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், 2004ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் திடீரென அரசிடமிருந்து ஒரு அறிவிப்பு வெளியானது. அதுவரை நிவாரணம் பெற்று வந்தவர்களின் எண்ணிக்கை 50வீதத்தினால் குறைக்கப்படப் போவதாக. பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டே அந்த எண்ணிக்கை குறைப்பு செய்யப்பட்டது.

* மீள் குடியமர்வு நிதியாக அரசால் வழங்கப்படும் 25000 ரூபாவை பெற்று ஒரு வருடம் கடந்தவர்களுக்கு நிவாரணத்தை இடை நிறுத்துவது எனவும் -

* தற்போது நடைமுறையிலுள்ள யுத்த நிறுத்தத்தின் பிற்பாடு ஏ-9 நெடுஞ்சாலை திறந்த பின்னர் குடாநாட்டுக்கு வந்தோருக்கும் -

* உயர் பாதுகாப்பு வலயங்களினுள் வீடுகளை இழந்தோருக்கும் தொடர்ந்து நிவாரணத்தை வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிபந்தனைகளின்படி 59000 குடும்பங்களே நிவாரணத்தைப் பெறும் தகுதியை பெற்றன. 80,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிவாரணத்தை தொடர்ந்து பெறமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இந்த அவல நிலை தொடர்பாக யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம், ஜனாதிபதி, பிரதமர், எதிர் கட்சித் தலைவர், ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளரும் ஆலோசகருமான ஹரீம்பீரிஸ் புனர்வாழ்வு புனரமைப்பு மீள் குடியமர்த்துகை அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு குடாநாட்டிலே நிவாரணம், அதிகமான குடும்பங்களுக்கு எதுவித முன்னறிவித்தலுமின்றி இடைநிறுத்தப்பட்டமை தொடர்பாக எழுந்த பிரச்சினைகளை எடுத்துக் கூறும் கடிதங்களை அனுப்பி வைத்திருந்தது.

இந்தக் கடிதங்களில் பின்வரும் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

* இதுவரை குடாநாட்டிலே இயல்பு வாழ்க்கையானது தோற்றுவிக்கப்படவில்லை.

* பொது மக்கள் சுதந்திரமாக தொழில் செய்யக்கூடிய நிலை உருவாகவில்லை.

* படைநிலைகளை பின்நகர்த்தவில்லை. என்பனவே முக்கியமானவையாகும்.

எனவே, மாற்று ஏற்பாடு ஒன்று செய்யப்படும் வரை நிவாரணத்தை தொடர்ந்து வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டதோடு இடப்பெயர்வுகள் ஏற்படுவதற்கு முன்பே வறிய குடும்பங்களுக்கு இலவச உணவு முத்திரைகள் விநியோகிக்கப்பட்டு வந்தமைமையும் சுட்டிக் காட்டியிருந்தது.

பின் மே மாதம் 26ஆம் திகதி யாழ். மாவட்ட அரச அதிபர் எஸ். பத்மநாதன் தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றிலே ஹரீம் பீரிஸ் கலந்துகொண்டார். இக் கூட்டத்தில் குடாநாட்டிலுள்ள பிரதேச செயலர்கள். அரசு சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சுசில் சந்திரபால ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்திலும் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் "நிவாரண விநியோக இடை நிறுத்தம்" தொடர்பாக பிரஸ்தாபித்தது. அதன் பலனாக மாற்று ஏற்பாடொன்று செய்யப்படும் வரை ஆறு மாத காலப்பகுதிக்கு நிவாரண விநியோகத்தை இடையூறின்றி மேற்கொள்பவராக அரச அதிபரும், ஹரீம் பீரிசும் கூட்டாக உறுதி மொழி வழங்கியிருந்தனர்.

கூட்டம் முடிவுற்று சில நாட்களில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளரினால் அரச அதிபருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. நிவாரணத்தை மாசி, பங்குனி, சித்திரை ஆகிய மூன்று மாதங்களுக்கு வழங்குவது எனவும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. அதன்படி மாசி மாதத்திற்கான நிவாரணம் வழங்கப்பட்டது.

ஆனால், திடீரென மீண்டும் ஓர் கடிதம் அரச அதிபருக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டது. அதில் முன்னர் குறிப்பிட்டபடி நிவாரணம் இடைநிறுத்தப்பட்டோருக்கு தொடர்ந்து நிவாரணம் வழங்க வேண்டாம் என தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்கள் கடந்தும் இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை. நிவாரணம் இடைநிறுத்தப்படாதோருக்கும் இக்காலப் பகுதிகளுக்கான நிவாரணம் வழங்கப்படவில்லை. தற்போது பங்குனி, சித்திரை மாதங்களுக்குரிய நிவாரணங்களை இவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

இது தொடாபாக நாம் யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் திரு. ப. கனகலிங்கத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

நிவாரண விநியோகத்தை இடைநிறுத்துவது ஏற்றுக்கொள்ளமுடியாத விடயம். எமது மக்கள் இயல்பு வாழ்வு ஏற்படும் வரை நிவாரணத்தை தொடர்ந்து வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படாவிட்டால் பாதிக்கப்பட்ட மக்களுடன் இணைந்து யாழ். மாவட்ட செயலகம் முற்றாக ஸ்தம்பிக்கும் படியான தொடர் மறியற் போராட்டம் ஒன்றை நடாத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் தற்போது நிவாரண விநியோக அளவு போதுமானதாக வில்லையெனவும் அவர் சுட்டிக் காட்டினார். தற்போதைய நிவாரண விநியோக விபரம் மாதமொன்றுக்கு 5 பேர் அதற்கு மேல் கொண்ட குடும்பத்துக்கு 1260 ரூபாவும், 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு 1016 ரூபாவும், 3 பேர் கொண்ட குடும்பத்துக்கு 840 ரூபாவும், 2 பேர்கொண்ட குடும்பத்துக்கு 408 ரூபாவும், ஒருவர் கொண்ட குடும்பத்துக்கு 336 ரூபாவும் என அமைந்துள்ளது.

தற்போதைய அதிகரித்த வாழ்க்கைச் செலவுகளுக்கு இந்த அளவு திட்டம் போதுமானதாகவில்லையெனவும் எனவே, மீண்டும் பரிசீலனை செய்யப்பட்டு இது அதிகரிக்கப்படவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த விடயம் தொடர்பாக சர்வதேச சமூகமும் அரச பிரதிநிதிகளும் அரசுக்கு அழுத்தத்தை கொடுக்க வேண்டுமென தாம் எதிர்பார்ப்பதாகவும் கனகலிங்கம் தெரிவித்தார்.

அரசு சாதாரண மக்களின் வாழ்வியல் தொடர்பாக முடிவெடுக்க வேண்டிய நிலையிலுள்ளது. போரா? அல்லது போர் முனைப்பின்றி அமைதி வாழ்வா? தீர்மானிக்கும் சக்தியாக அரசுத் தலைவர்களே இன்று உள்ளனர்! அவர்களது சிந்தனை மாற்றம் இந்த சிறிய நாடான இலங்கையை உலகப் படத்திலே உன்னிப்பாக காட்டலாம். இல்லாவிடில் உலகப் படத்திலிருந்தே அழித்து விடலாம்!

□□□

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து*
*இயற்கை அறிந்தும் செயல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ராஜித சேனாரத்தினவின் அறிவிப்பும் அரசுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியும்.

இலங்கையில் இனவிவகாரத்தை அல்லது சமாதான முன்னெடுப்பை மையமாக வைத்து நடந்துவரும் அரசியல் சதுரங்கத்தில் ஒரு யுத்திபூர்வமான காய்நகர்த்தலை எதிர்க்கட்சி - அதாவது ஐக்கிய தேசியக்கட்சி மேற்கொண்டு ஜனாதிபதிக்கும், அவரை ஆட்டிப்படைக்கும் சக்தியாக தன்னைப் பலப்படுத்தி நிற்கும் ஜே.வி.பி யினருக்கும் ஒரு திகில் நிலையை உருவாக்கி வைத்துள்ளது என்றே கூறுவேண்டும்.

இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பாக அரசாங்கம் பேசுவதற்கு எத்தனிக்குமேயானால் - அவ்வாறான அறிவித்தல் வெளியான அடுத்தகணமே, அரசுக்கான சகல ஆதரவையும் ஜே.வி.பி எத்தவிதமான அறிவிப்புமின்றி விலகிக்கொள்ளும் என ஜே.வி.பியின் பிரசார செயலாளா விமல் வீரவன்ச அரசை அச்சுறுத்தும் பாணியில் அறிக்கை விட்டு இரண்டு நாள்கூட ஆகவில்லை அதற்குள் ஐ.தே.கட்சி வெளியிட்டுள்ள அறிவிப்பானது ஒரு நுட்பமான அரசியல் சதுரங்க காய் நகர்த்த லாகியுள்ளது.

அரசாங்கம் இடைக்கால நிர்வாக அதிகாரசபை குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு தயாரானால், அந்த அடிப்படையிலான சமாதான முன்னெடுப்பு முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சி முழுமையான ஆதரவை வழங்கத்தயார் என அந்தக் கட்சியின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ராஜித சேனாரத்தின பகிரங்கமாக அறிவித்துள்ளமையானது அரசோ, அதன் இயக்க சக்தியான ஜே.வி.பியோ எந்த வகையிலும் எதிர்பார்க்காதவொன்றே.

உண்மையில் சமாதானம் மீதான ஆழமான அக்கறையுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமென்ற பெருவிருப்புடன் ஜனாதிபதியின் சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகளுக்கு, அதனை முற்றாகவே எதிர்த்துவரும் ஜே.வி.பி யினர் மற்றும ஹெல உறுமய பிக்குகள் போன்றவர்களால் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் - மிரட்டல்கள் போன்றவற்றிலிருந்து பாதுகாத்து உதவவேண்டும் என்ற உன்னத நிலைப்பாட்டிலிருந்து கொண்டு இந்த அறிவிப்பை ஐ.தே.கட்சி வெளியிட்டிருக்கிறது என்று சொல்லமுடியாது. ஆனால், அரசுக்கு சமாதான முயற்சிகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையை சரியாகப் புரிந்துகொண்டு இந்த அறிவிப்பை வெளியிட்டதன் மூலம் அதற்கு. இன்னமும் சிக்கலானதும், குழப்பமானதுமான நெருக்கடி நிலையை உருவாக்கிவிட்டது என்பதில் ஐயமில்லை.

ஐ.தே.முன்னணி ஆட்சிக்காலத்தில் சமாதான பேச்சுவார்த்தைகள் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வந்த வேளையில், இடைக்கால நிர்வாகம் தொடர்பான பேச்சு ஆரம்பமான போது அதுதொடர்பாக எதிர்க்கட்சிகளின் அச்சுறுத்தலுக்கும், பேரினவாதிகளின் மிரட்டலுக்கும் பயந்து அது தொடர்பாக பேசுவதற்கு இதே ஐக்கிய தேசியக் கட்சியினர் இழுத்தடித்தனர் என்பதை இந்தக் கட்டத்தில் கவனித்துக்கொள்வது அவசியமாகும்.

அப்போது பேச்சுவார்த்தைகள் ஒரு ஸ்தம்பித நிலையை அடைந்தவேளையில்தான், தமிழீழ விடுதலைப் புலிகள் - இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பான தமது திட்ட வரைபினை அன்றைய அரசிடம் கையளித்ததைத் தொடர்ந்து, அந்த அரசை ஜனாதிபதி தன் அதிகாரபலத்தைப் பயன்படுத்தி கலைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, ஐக்கிய தேசியக் கட்சியும் சரி, தற்போதைய அரசும் சரி இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பாக எதிரான கொள்கைகளுடனேயே இயங்கிவருகின்றன என்பது தெளிவு.

எனினும், இன்றைய அரசு இப்போது சமாதான முயற்சிகளுக்கு குறிப்பாக - இடைக்கால நிர்வாகம் குறித்த பேச்சுவார்த்தைக்கு ஜே.வி.பியையும், ஹெல உறுமயவையும் காரணங்காட்டி இழுத்தடிக்க முடியாதநிலை ராஜிதசேனாரத்னவின் அறிவிப்பு மூலம் ஏற்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் மிரட்டல் - ஆட்சிக்கு ஆபத்தை ஏற்படுத்துமென அரசு இனிக் குழம்பமுடியாது. ஐ.தே.கட்சியின் ஆதரவு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேச்சுக்களின் தளத்தில் சமாதானப்பேச்சுக்களை முன்னெடுக்க மட்டுமல்ல, ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமயக்காரரின் மிரட்டலை புறந்தள்ளிவிடவும் உதவும்.

இதுவரைகாலமும் ஆளும்கட்சி எதிர்க்கட்சியையும், எதிர்க்கட்சி ஆளும்கட்சியையும் குறைகூறிக்கொண்டே சமாதான முயற்சகளைக் கிடப்பில்போட்டுவந்தன. அதிகாரசபை குறித்து பேச்சுகளைத் தொடங்குவதற்கான நகர்வுகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி முழு அளவில் ஆதரவை வழங்கும் என்று வெளிப்படையாகவே பிரகடனம் செய்துவிட்டார்.


இனிமேல் ஜனாதிபதியோ அரசோ இது தொடர்பாக இழுத்தடிப்புச் செய்வது அர்த்தமற்றதாகும்.

முதல்முதல் வரலாற்றில் முதல் தடவையாக இனப்பிரச்சினை தொடர்பான தீர்வுமுயற்சிகளில் அதுவும், மிகவும் முக்கியத்துவம்மிக்க இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பாக பேசுவதற்கான நகர்வுகளில் ஆளும்கட்சிக்கு - எதிர்க்கட்சி முழு ஒத்துழைப் பையும் தருவதாக சர்வதேசம் சாட்சியாகக் கூறிவிட்டது.

இப்போது முடிவுசொல்லவேண்டியது அரசு... அதாவது ஜனாதிபதிதான். அவர் என்ன சொல்லப்போகிறார்...?

எதிர்க்கட்சி ஆதரவுடன், ஜே.வி.பியை ஓரங்கட்டிவிட்டு, இடைக கால நிர்வாக அதிகாரசபை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசி தற்போது நிலவும் சமாதானம் தொடர்பாக நம்பிக்கையீனத்தையும், போர் குறித்த அச்சத்தையும் பதற்றமும், பீதியும் நிறைந்த சூழ்நிலையையும் மாற்ற ஜனாதிபதி துணிவாரா என்பதே மக்களின் தற்போதைய கேள்வியாகும். ஜனாதிபதி இதற்கு என்ன சொல்லப்போகிறார்?

## நாடும் நடப்பும்




செய்தி :- ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்களை பதவியை இராஜினாமாச் செய்யுமாறு அழுத்தமும், அச்சுறுத்தலும் தொடர்கிறது.

# கற்கோவளத்தில் அகற்றப்பட்ட பதினாறு மிதிவெடிகள் திருட்டு

டெனிஸ் மிதிவெடி அகற்றும் பிரிவினரால், கற்கோவளப் பகுதியில் அகற்றப்பட்ட 16 மிதிவெடிகள் களவாடப்பட்டுள்ளன. இதனால் அந்தப் பகுதியில் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

வடமராட்சி கற்கோவளம் பகுதியில், டெனிஸ் மிதிவெடி அகற்றும் பிரிவினரால், கடந்த சில காலமாக வெடிபொருட்கள் அகற்றப்பட்டு வருகிறது.

அங்கு வெடிபொருள் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தாம் கண்டெடுக்கும் வெடிபொருட்களைப் பொதுவான ஒரு இடத்தில் சேகரித்து வைத்திருந்தனர். அவ்வாறு சேகரிக்கப்பட்ட வெடிபொருட்களில் 16 மிதிவெடிகள் இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளன.

இதனால், அதிர்ச்சியடைந்த டெனிஸ் மிதிவெடி அகற்றும் பிரிவினர், அந்தப் பகுதியில் வெடிபொருள் அகற்றும் பணியை இடைநிறுத்தியுள்ளதுடன், இது தொடர்பாகப் பொலிசாருக்கும் அறிவித்துள்ளனர்.

இது குறித்த விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மிதிவெடிகள் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியவையாதலால், அவற்றைக் களவாடியவர்கள் உடனடியாகத் தம்மிடம் அவற்றை ஒப்படைக்குமாறு டெனிஸ் மிதிவெடியகற்றும் பிரிவினர் கேட்டுள்ளனர். (ப)

# பட்டதாரிகளுடனான அவசர சந்திப்பு!

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகள் நியமனத்தின்போது, வன்னிப் பகுதி உட்பட, குடாநாட்டின் சில பகுதிப் பட்டதாரிகள், புறக்கணிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக - ஆராயும் கூட்டமொன்று இன்று பிற்பகல் 11 மணிக்கு டி.எம்.ஐ.கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கமும், நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கமும் இணைந்து இந்தக் கூட்டத்தை நடத்தவுள்ளனர். இதன் முதற்கட்டமாக யாழ்.வலயம் செயலர் பிரிவுக்குட்பட்ட பட்டதாரிகளுடனான சந்திப்பு இன்று முற்பகல் 11 மணிக்கு டி.எம்.ஐ.கல்வி நிலையத்திலும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரவுக்குட்பட்டவர்களுடனான சந்திப்பு பிற்பகல் 2 மணிக்கு சித்தங்கேணி சுப்றா கல்வி நிலையத்திலும் நடைபெறும்.

நாளை காலை 10 மணிக்கு தீவகப் பட்டதாரிகளுடனான சந்திப்பு, தீவகத்திலும், 1 மணிக்குச் சாவகச்சேரியிலும், பிற்பகல் 4 மணிக்கு வடமராட்சியிலும் நடைபெறவுள்ளது.

# வன்னிப் பட்டதாரிகள் புறக்கணிப்பு சிவாஜிலிங்கம் எம்.பி. கண்டனம்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசினால் வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனத்தின்போது, வன்னிப் பகுதியும், குடாநாட்டின் சில பகுதிகளும் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளமை குறித்து, தமது கடுமையான ஆட்சேபத்தை தெரிவிப்பதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் நமது ஈழநாட்டுக்குத் தெரிவிக்கையில் -

மீண்டும் இனரீதியான பாரபட்சமாகவும், கண்துடைப்பு நாடகமாகவுமே அரசாங்கத்தால் குறிப்பிட்டளவு பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது. அதிலும் வன்னிப் பகுதியான புலிகளின் பகுதி, திட்டமிட்டே ஒதுக்கப்பட்டிருக்கலாம். அரசின் இந்த நடவடிக்கையால் புதிய அரசின்மீது மக்களுக்கு ஒரு நம்பிக்கையீனத்தையே ஏற்படுத்தியுள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஏட்டிக்குப் போட்டியாகப் பாடும் ஒலிபெருக்கிகளால் தொல்லை!

## மனித உரிமை ஆணைக்குழுவில் புகார்

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள தொட்டிலடி கிராமப்பகுதியில் அமைந்துள்ள இரண்டு கோயில்களில் - போட்டியாக ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு, பாடல்கள் இசைக்கப்படுகின்றமையால், மக்களின் இயல்புநிலை பாதிப்படைகின்றது என அந்தப் பகுதி மக்கள் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சங்கானை செங்கற்படை மகாதேவி பிள்ளையார் ஆலயத்திலும், இதிலிருந்து சுமார் 1500 மீற்றர் தூரமுடைய தொட்டிலடியில் அமைந்துள்ள கோயிலிலுமே ஒலிபெருக்கிகளில் ஏட்டிக்குப் போட்டியாகப் பாடல்கள் ஒலிக்கவிடப்படுவதனால், பாடசாலை மாணவர்கள், அங்குள்ள நோயாளர்கள், வாகன சாரதிகள் பெரும் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர் என அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மக்கள் இடையூறான செயற்பாட்டை, சங்கானை பொலிஸாரிடமும், கிராமசேவகரிடமும் தெரிவிக்குமாறு முறைப்பாட்டாளர்களுக்கு மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி தெரிவித்ததுடன், இதற்கான மேலதிக நடவடிக்கையைத் தாம் மேற்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

# நீல் தம்மிக்கவின் சடலத்தை பொறுப்பேற்க தந்தை மறுப்பு

கொட்டாவவில் அமைந்துள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த மேலும் ஒருவரின் சடலம் இனங்காணப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த எட்டுப்பேரில், ஏழுபேரின் சடலங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டது தெரிந்ததே.

இந்த நிலையில், உயிரிழந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நீல் தம்மிக்க என்பவரின் சடலத்தை, அவரது தந்தை நேற்று முன்தினம் அடையாளம் காட்டினார்.

இது தொடர்பாக அவர் ஹோமகம நீதிமன்றில் வாக்குமூலமொன்றையும் அளித்துள்ளார். நீல் தம்மிக்கவின் தந்தை சடலத்தை அடையாளம் காட்டியபோதிலும், அதனைப் பொறுப்பேற்க மறுப்புத் தெரிவித்திருப்பதாகப் பொலிஸார் கூறினர்.

மேற்படி சம்பவத்தில் இறந்த நால்வரின் சடலங்களை உறவினர்கள் பொறுப்பேற்க மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வன்னிப் பட்டதாரிகள் புறக்கணிப்பு நாளை மறுதினம் மறியற்போராட்டம்

## செயலகம் முன் நடைபெறும்

புதிய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தின்போது, வன்னி மற்றும் குடாநாட்டின் சில பகுதிகளைச் சேர்ந்த பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டமையைக் கண்டித்து, நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து காலை 10.30 மணிவரை யாழ். செயலகத்தின் முன்னால் மறியற்போராட்டமொன்று நடத்தப்படவுள்ளது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த மறியற்போராட்டம் தொடர்பாக இன்று யாழ்ப்பாணம் டீ.எம்.ஐ கல்வி நிலையத்தில பட்டதாரிகள் சங்கத்துடன் கூடி ஆராயவுள்ளதாக சிவாஜிலிங்கம் எம்.பி. தெரிவித்தார்.

இதேவேளை, பட்டதாரிகளுடனான சந்திப்பையடுத்து, சங்க பிரதிநிதிகள் சிலரை அழைத்துச் சென்று, நிதி அமைச்சருடன் கலந்துரையாடத் தீர்மானித்திருப்பதாகவும் அவர் மேலும் தெ..வித்தார்.

# பேச்சுக்களை இரண்டாம் பட்சமாக்கும் சந்திரிகாவின் நாசகாரத்திட்டம்

இலங்கை அரசைப் பொறுத்தவரை அதன் நிலைப்பாடு அமைதி தொடரவும் வேண்டும், பேச்சுக்கள் நடக்கவும் கூடாது, தமிழ் மக்களுக்கு எதையும் வழங்கவும் கூடாது என்பதாகும்.

இதற்காக கையாண்டுள்ளதே கருணாவின் குழு என்ற புதிய ஆயுதக்குழு உருவாக்கலாகும். மட்டக்களப்பில் மக்கள், கல்வியாளர்கள், ஊடகவியலாளர்கள், போராளிகள் என சகலமட்டத்திலும் கொலைகளை இக்குழு செய்திருக்கிறது அல்லது இக்குழுவின் பேரில் செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் இந்த ஆயுதக் குழுவின் படுகொலைகள் மிகமோசமாக குழப்ப நிலையை உருவாக்கியுள்ளன.

இது ஒரு பெரிய விவகாரமாக மாற்றப்பட்டுள்ளது. இந்தக் கொலைகள் ஊடகங்களில் தெரி விக்கப்படுவது போல அரச நிர்வாகப் படியான கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே.

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை அம்பாறை மாவட்டங்களில் இப்படியாக எதுவும் நடக்கவில்லை. மட்டக்களப்பில் மட்டுமே நடககின்றது. கருணாவின் சதியைக் கொண்டு மட்டக்களப்பில் இந்தக் கொலைகள் நடத்தப்பட்டால் அதனை வேறு எவர் மீதும் சாட்ட முடியாது என்பதற்காக அதனை மட்டக்களப்புக்குள் மட்டுமே நடத்துகின்றது. காரணம் கொலைகளுக்கு காரணமாக சாட்டுதல் செய்வதற்கு கருணாகுழு என்பது இருக்கின்றது.

கருணாவின் நெருங்கிய சகாக்களைக் கொண்டே இந்தக் குழு செயற்படுகின்றது. கருணா, கருணாவின் சகாக்கள் - புலனாய்வுத்துறை என்பன சேர்ந்ததாகவே கருணா குழு இந்தக் கொலைகளை செய்து வந்துள்ளது.

மட்டக்களப்பில் கருணா குழுவின் பேரில் நடந்த கொலைகள் அனைத்தும் இராணுவ பாதுகாப்பு உயர் வலயங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் மிகத் துணிகரமாக நடந்துள்ளன. கடைசிவரை கொலையாளிகளை மட்டக்களப்பில் மிக இறுக்கமான புலனாய்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள - அரச தரப்பு பிடிக்கவோ தகவல்களைத் திரட்டவோ இல்லை.

இது அரச தரப்பால் முடியாத ஒன்றல்ல. கொழும்பில் இடம்பெற்ற பொலிஸ் நிலைய குண்டு வெடிப்பு, கொட்டாவு கருணா குழுவினர் கொலை தொடர்பாக உடனடியாக தகவல்களை திரட்டி வெளியிட்ட அரச பொலிஸ படைத்துறை தரப்புக்கு குறுகிய பிரதேசமாக உள்ள மட்டக்களப்பு இராணுவப்பகுதிக்குள் நடந்த கொலைகளை கண்டு பிடிக்க முடியாதிருப்பது என்பது ஒரு திட்டமிட்ட நாடகமே என்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

இன்றுவரை அது தொடர்பில் எதுவித தகவல்களுமே பொலிஸாரால் வெளியிடப்படவில்லை இது கருணா குழுவுக்கும் - இராணுவப் புலனாய்வு அமைப்புக்கும் இடையிலான இணைந்த செயற்பாட்டை தெளிவாக்கியிருக்கின்றது.

இதைவிட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருணாவின் மிக முக்கிய சகாவாக செயற்பட்டு வருகின்றார்.

இதைவிட கருணாவை சந்திரிகாவின் சகோதரனும் அமைச்சருமான அனுரா பண்டாரநாயக்கவே சிங்கப்பூருககு கொண்டு சென்றுள்ளதாகவும் உறுதி செய்யப்படுகின்றது. இவை கருணா குழுவின் வலைப்பின்னலில் அரசு எத்தனை முக்கிய பங்கை வகிக்கின்றது என்பதை உறுதி செய்கின்றது.

இது இப்படியிருக்க கருணாவுக்கும் தமக்கும் தொடர்பேயில்லை என சந்திரிகா அரசு தொடர்ந்து கைகளை விரிக்கின்றது.

இது மட்டக்களப்பில் கருணா குழுவின் பேரில் கொலைகள் தொடரும் என்ற செய்தியைச் சொல்வதாகும். அவர்களை தேடவோ, கண்டு பிடிக்கவோ கூட அரசு எதுவித நடவடிக்கைகளையும் எடுக்காதது எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற பாணியிலேயே அரசின் உண்மையை தெளிவாக காட்டியுள்ளது.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தால் இடைக்கால அரசு பற்றியே பேச வேண்டும் என்ற நிலைப்பாடு இருக்கின்றது. ஆகவே பேச்சுக்களை ஆரம்பிப்பது ஒரு ஆபத்தான நிலையை தனக்கு சிங்களவர் மத்தியில் கொண்டு வரும் என்கின்ற எண்ணம் சந்திரிகாவுக்கு உள்ளது.

போர் விடுதலைப்புலிகளின் பக்கமிருந்தே தொடங்கப்பட வேண்டும் என்பதை மற்றொரு நோக்கம். அல்லது பேச்சுவார்த்தை என்ற நிலை ஏற்படாது செய்தல் இன்னொரு நோக்கம். இவை இரண்டுக்கும் பொருத்தமான ஒரு ஏற்பாடே கருணா குழுவின மட்டக்களப்பு கொலைகளாகும்.

இந்தக் கொலைகள் மூலம் விடுதலைப் புலிகளின் பொறுமையைச் சோதித்து போரை தொடக்குவது இதன் ஒரு பக்கம்.

தாம் இதில் சம்பந்தப்பட்டால் இது ஒரு போர் நிறுத்த மீறலாக தம்மீது பழிவந்து விடும் என்பதற்காக தமது பின்னணி வெளித்தெரியாமல் கருணாவின் ஆட்களைக் கொண்டே கொலை களை செய்வித்து கொண்டிருப்பது மற்றொரு பக்கம்.

ஒட்டு மொத்த விளைவாக போர் நிறுத்தம் கேள்விக் குறியாக்கப்பட்ட நிலையில் சமாதானப் பேச்சுக்கள் என்பதை விடுத்து போர் நிறுத்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்தல் என்றளவுக்கு நிலைப்பாட்டை கொண்டு வந்து பேச்சுக்கள் பற்றிய கதையை 2 ஆம் பட்சமாக்கிவிட்டிருப்பது சந்திரிகாவின் நாசகாரத்திட்டங்களில் முதன்மையாகிவிட்டது.

# நல்லூர் கோட்ட மட்ட தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள்-2004

**வாசிப்பு பிரிவு - 1**
1 ஆம் இடம் ஜெ.டிலானி (யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை),
2ஆம் இடம் ச.சாரங்கா (யா/யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை),
3 ஆம் இடம் இ.கீர்த்தனா (யா/நல்லூர் புனித பெனடிக் வித்தியாலயம்)

**பிரிவு - 2**
1ஆம் இடம் க.ஜெனசி (யா/கொக்குவில் இராமகிருஸ்ணா)
2ஆம் இடம் ரு.மேனகா (யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி)
3 ஆம் இடம் மு.துஸ்யிந்தி (யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்)

**ஆக்கத்திறன் பிரிவு - 1**
1ஆம் இடம் கா.சௌஜா (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை),
2ஆம் இடம் சு.கானப்பிரியா (யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை),
3 ஆம் இடம் ஜோ.நிரோஜன் யூட் (யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை).

**பேச்சு - பிரிவு - 1**
1ஆம் இடம் ச.திலக்ஸன் (யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை),
2ஆம் இடம் ஜெ. சிந்துஜா (யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை),
3ஆம் இடம் கா.செளமி (யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

**பிரிவு - 2**
1ஆம் இடம் அ.உமாகரன் (யா/யாழ்.இந்துக் கல்லூரி),
2ஆம் இடம் கு.சுஜீவன் (யா/ கொக்குவில் இராமகிருஸ்ணா),
3ஆம் இடம் த. நாராயணி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

**பிரிவு - 3**
1ஆம் இடம் ஜோ.ஜயந் (யா/யாழ்.இந்துக் கல்லூரி),
2ஆம் இடம் வ.வோஸிகா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி),
3ஆம் இடம் ஆ.கஜேந்தினி (யா/கொக்குவில் ஞானபண்டிதா),

**பிரிவு - 4**
1ஆம் இடம் ப.பாமினி (யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி),
2ஆம் இடம் நா.ரேணுகா (யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்),
3ஆம் இடம் வீ.வித்தகன் (யா/யாழ்.இந்துக்கல்லூரி).

**பிரிவு - 5**
1ஆம் இடம் பெ.சந்திரகுமார் (யா/யாழ் இந்துக் கல்லூரி),
2ஆம் இடம் த.சங்கீதா (யா/யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி),
3ஆம் இடம் ஜெ.நிசாந்தி (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)

**பாலோதல் பிரிவு - 1**
1ஆம் இடம் சோ.திரியம்பதி (யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை),
2ஆம் இடம் சி.கோகுலீஸ்வரன் (யா/நல்லூர் பெனடிக் கல்லூரி),
3ஆம் இடம் செ.ஹரிசாங்கி (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

**பிரிவு - 2**
1ஆம் இடம் பா.கிருசாயி (யா/யாழ். இந்துக் கல்லூரி),
2ஆம் இடம் கு.தர்சிகா (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி),
3ஆம் இடம் சி.நிவேதா (யா/நல்லூர் இ.த.பெ. பாடசாலை)

**பிரிவு - 3**
1ஆம் இடம் இ.நரேஸ்குமார் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி),
2 ஆம் இடம் ம.சுபாஜினி (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி),
3 ஆம் இடம் செ.காந்திகா (யா/கொக்குவில் இராமகிருஸ்ணா)

**பிரிவு - 4**
1ஆம் இடம் தே.கிருஸ்ணி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி),
2ஆம் இடம் ஜெ.தர்சினி (யா/கனகரத்தினம் மகாவித்தியாலயம்),
3ஆம் இடம் ம.திருமகள் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)

**பிரிவு - 5**
1ஆம் இடம் அ.சுதர்சனா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி),
2ஆம் இடம் தீ.தாரணி (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி),
3ஆம் இடம் சி.நிசாந்தினி (யா/கோண்டாவில் இராமகிருஸ்ணன்)

**இசையும் அசைவும்**
**பிரிவு 1**
1ஆம் இடம் உ.ரிஸிகேசினி (யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை),
2ஆம் இடம் வ.பிரதா (யா/யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை),
3ஆம் இடம் ந.கஜீபன் (யா/ கல்வியங்காடு இ.த.க.பாடசாலை)

**இசை தனி பிரிவு - 2**
1ஆம் இடம் நி.ஜெனனி (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி),
2ஆம் இடம் இ.அர்ஜுன் (யா/யாழ் இந்துக் கல்லூரி),
3ஆம் இடம் த.கிருஸ்ணதீபன் (யா/கொக்குவில் ஞானபண்டிதா வித்தியாலயம்).

**பிரிவு - 3**
1ஆம் இடம் தே.விதுர்ஷன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி),
2ஆம் இடம் கு.நிரோஜா (யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்),
3ஆம் இடம் கு.ஜேசுதாஸன் (யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்)

**பிரிவு - 4**
1ஆம் இடம் சி.வஜி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி),
2ஆம் இடம் செ.உசாந்தி (யா/கோண்டாவில் இந்து ம. வித்தியாலயம்),
3ஆம் இடம் க.கலைச்செல்வி (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)

**பிரிவு - 5**
1ஆம் இடம் த.க[illegible]ஸ்கர் (யா/யாழ்.இந்துக் கல்லூரி),
2ஆம் இடம் க.சித்திரா (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி),
3ஆம் இடம் த.சுபேந்தினி (யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்).

**நடனம் தனி பிரிவு - 1**
1ஆம் இடம் தெ.சரவண்ஜா (யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை),
2ஆம் இடம் [illegible] சி.லியூசா (யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை),
3ஆம் இடம் ச.நிகிந்தா (யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை)

**பிரிவு - 2**
1ஆம் இடம் கி.பிரவீனா (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி),
2ஆம் இடம் பா.கீர்த்தனா (யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்),
3ஆம் இடம் ச.பவிதா (யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)

**பிரிவு - 3**
1ஆம் இடம் பா.மிதர்சினி (யா/கனகரத்தினம் மகாவித்தியாலயம்)

**பிரிவு - 4**
1ஆம் இடம் ந.கோமகள் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி),
2ஆம் இடம் பா.அனுசன் (யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்),
3ஆம் இடம் ஹ.காஞ்சனா (யா/நல்லூர் இந்து த.பெ.பாடசாலை)

**நடனம் தனி 05**
01 செ. செந்துஸா யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி
02 பூ.காந்திபா யா/கனகரத்தினம் ம.ம.வி.

**இசை குழு:1**
01 யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி
02 யா/யாழ் இந்துக் கல்லூரி
03 யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

**இசை குழு: 2**
01 யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி
02 யா/கனகரத்தினம் ம.ம.வி
03 யா/முத்துதம்பி மகா வித்தியாலயம்

**நடனம் குழு: 1**
01 யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
02 யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி
03 யா/கனகரத்தினம் ம.ம.வி.

**நாட்டிய நாடகம் குழு: 2**
01 யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி
02 யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

**வில்லுப்பாட்டு**
01 யா/யாழ் இந்துக் கல்லூரி

**விவாதம்**
01 யா/யாழ். இந்துக் கல்லூரி

**தமிழறிவு வினாவிடைப் போட்டி**
01 யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி
02 யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
03 யா/நல்லூர் ஸாதனா சீ.சீ.த.க. பாடசாலை

**நாடகம்**
01 யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
02. யா/நல்லூர் ஸாதனா சீ.சீ. த.க. பாடசாலை
03 யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்

**நாட்டுக் கூத்து சிந்து நடை**
01 யாழ். இந்து மகளிர் கல்லூரி
02 யா/செங்குந்தா இந்துக் கல்லூரி

**இசை நாடகம்**
01 யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை

மேற்படி நிகழ்வுகளில் முதலாம், இரண்டாம் நிலையை பெற்ற பாடசாலைகள் வலயமட்டப் போட்டிக்குத்தெரிவு செய்யப்பட்டவை ஆகும். வலய மட்டப்போட்டிகள் யா/வேம்படி மகளிர் கல்லூரி, யா/யாழ். மத்திய கல்லூரி, யா/திருக்குடும்ப கன்னியர்மடம் ஆகிய பாடசாலைகளில் இன்றும், நாளையும் நடைபெறும்.

வலய மட்ட எழுத்தாக்கப் போட்டிகள் நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கு யா/யாழ். இந்து மகளிர் கல்லூரியில் 17-08-2004 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். போட்டியாளர்கள் எழுதுமதாள் கொண்டு வரவேண்டும்.

போட்டியாளர்களை அழைத்து வரும் ஆசிரியர்கள் போட்டி முடியும் நேரம் வரை சமூகமளித்தல் வேண்டும்.

**01 ஆக்கம் எழுத்து**
01 இ.பிரணவன் யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
02 க.யசிந்தா யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
03 ஒ.கேதாரணி யா/யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

**02 கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல்**
01 க.நதீனா யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்
02 கு.அர்ச்சனா யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்
03 சு.சுகந்தினி யா/முத்துதம்பி மகாவித்தியாலயம்

**03 கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல்**
01 பி.லோகபிரசாத் யா/யாழ். இந்துக் கல்லூரி
02 சி.தமயந்தி யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
03 தே.வியூரேகா யா/உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலை

**04 கட்டுரைதல் வரைதல், இலக்கியம் நயத்தல்**
ம.ம.வித்தியாலயம்
02 இ.மோகனதரன் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
03 அ.சிந்துஜா யா/கோண்டாவில் இராமகிருஸ்ணன் ம. வித்தியாலயம்

**05 கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**
01 ப.கஜேந்தினி யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
02 கோ.பிரசாந்தினி யா/செங்குந்தா இந்துக் கல்லூரி
03 அ.ஹரிநிரன் யா/யாழ். இந்துக் கல்லூரி

**04 இலக்கணப் போட்டி**
01 சா.நிசாந்தன் யா/யாழ். இந்துக் கல்லூரி
02 கி.டல்ஸினி யா/கொக்குவில் இந்துக்கல்லூரி
03 த. தாட்சாயினி யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி

**05 இலக்கணப் போட்டி**
01 இ.ரிபவன் யாழ்.இந்துக் கல்லூரி
02 து.ஹரணி யாழ்.இந்து மகளிர் கல்லூரி
03 பா.சுசித்தா கோண்டாவில் இந்து ம.வித்தியாலயம்

**04 குறுநாடக ஆக்கம்**
01 கு.லக்சாயினி கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயம்
02 ஸ்ரீ.சோபிகா கொக்குவில் இராமகிருஸ்ண வித்தியாலயம்
03 நா.நாகநந்தினி செங்குந்தா இந்துக் கல்லூரி

**05 குறுநாடக ஆக்கம்**
01 செ. குகனேஸ்வரி பெரியபுலம் மகாவித்தியாலயம்

**04 கவிதை ஆக்கம்**
01 லோ.சரண்யா யாழ்.இந்துக் கல்லூரி
02 செ.சுதர்சனா செங்குந்தா இந்துக் கல்லூரி
03 கு.குகரஞ்சி கொக்குவில் இராமகிருஸ்ண வித்தியாலயம்

**05 கவிதை ஆக்கம்**
01 சு.பவித்திரா செங்குந்தா இந்துக் கல்லூரி
02 ச.கஜேந்தினி கொக்குவில் இந்துக் கல்லூரி
03 க.ஜெயனி பெரியபுலம் மகா வித்தியாலயம்.

**04 சிறுகதை ஆக்கம்**
01 ப.அரிராம் யாழ்.இந்துக் கல்லூரி
02 ப.சசிலோ கொக்குவில் கிழக்கு நாகமகள் வித்தியாலயம்
03 மோ.லக்சஜானி கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்

**05 சிறுகதை ஆக்கம்**
01 இ.தர்சினி கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
02 இ.பிருதுவிராஜ் யாழ்.இந்துக் கல்லூரி
03 செ.செல்வமனோகரி செங்குந்தா இந்துக் கல்லூரி

### காஸாவின் தென்பகுதியில்

# இஸ்ரேல் ஹெலிகொப்டர் தாக்குதல் இஸ்லாமிய போராளிகள் இருவர் பலி



காஸாவின் தென்பகுதியில் காரில் பயணம் செய்துகொண்டிருந்த பலஸ்தீன ஆயுததாரிகள் மீது இஸ்ரேல் ஹெலிகொப்டர்கள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் சிறிய ஆயுதக்குழுவான அபு - அல் றிஸ் அமைப்பின் தலைவரான அமர் அபுசுதா எனவும் மற்றயவர் அவரது மெய்ப்பாதுகாவலரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரும் மெய்ப்பாதுகாவலர்களும் ரபா அகதிமுகாமிற்கருகில் காரில் பயணம் செய்துகொண்டிருந்த வேளையில் - இஸ்ரேல் ஹெலிகொப்டர்கள் கார் மீது ஏவுகணைத தாக்குதலை நடத்தியதாகவும், அதன்போது கார் வெடித்துச் சிதறி எரிந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலை இஸ்ரேல் இராணுவமும் உறுதி செய்ததுடன், கொல்லப்பட்ட அபுசுதா, பல இஸ்ரேலியர் கொல்லப்பட்டதற்கு காரணமாக இருந்தவரெனவும் தெரிவித்தது.

சில நாட்களுக்கு முன் கொலலப்பட்ட அபுசுதா மறைந திருந்து நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இஸ்ரேல் அதிகாரி ஒருவர் காயமடைந்ததாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

அண்மைய சில மாதங்களில் இஸ்ரேல் இராணுவம் ரபா அகதிமுகாமைச் சூழ இஸ்லாமியப் போராளிகளைத் தேடி நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

### கோரிக்கைகளை நிறைவேற்றாவிடின்

# கடத்தப்பட்ட ஏழுபேரில் ஒருவர் படுகொலை செய்யப்படுவாராம்

### கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை

(பாக்தாத்)

நேற்று இரவு 8.30 மணிக்குள் தங்கள் கோரிக்கைகளை ஏற்காவிட்டால் இந்தியப் பணயக் கைதிகளில் ஒருவரின் தலையைத் துண்டித்துக் கொல்லப்போவதாக, ஈராக் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்திருந்தனர். இந்தியர் ஒருவரை துப்பாக்கி முனையில் மிரட்டும் படத்தையும் அவர்கள் வெளியிட்டிருந்தனர்.



# இரண்டாவது முறையாக புஷ் சைக்கிளிலிருந்து விழுந்தார்



(வொஷிங்ரன்)

அமெரிக்க ஜனாதிபதி புஷ் டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள தனது பண்ணையில் கடந்த வாரம் தங்கினார்.

அப்போது அவர் 18 மைல் தூரம் சைக்கிளில் சவாரி செய்தபோது அவர் கீழே விழுந்தார்.

இதில் அவரது முழங்காலில் சிராய்ப்புக் காயம் ஏற்பட்டது. காயம் லேசாக இருந்ததால் அவர் மருந்து போட்டுக் கொள்ளவில்லை.

புஷ் சைக்கிளில் இருந்து கீழே விழுந்தது 2 ஆவது தடவை ஆகும். ஏற்கனவே கடந்த மே மாதம் அவர் சைக்கிளில் இருந்து கீழே விழுந்தமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு உதவுவதை சூடான் நிறுத்தாவிட்டால் பொருளாதாரத்தடை

### விதிக்குமாறு ஐ.நாவிடம், அமெரிக்கத் தூதர் கோரிக்கை

(வொஷிங்ரன்)

ஜான் ஜாவீட் தீவிரவாதிகளுக்கு ஆதரவளிப்பதை 30 நாட்களுக்குள் சூடான் அரசு இடைநிறுத்தாவிட்டால், சூடான் அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டும் என, ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜோன்டன்போத் ஐக்கிய நாடுகள் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர்- சூடான், ஜான் ஜாவீட் தீவிரவாதிகளுக்கு ஆதரவு வழங்கி வருவதால் தினமும் சூடானில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் மரணமடைந்து வருவதாகத் தெரிவித்தார்.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவரின் இந்தக் கோரிக்கைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் 15 நாடுகளைக் கொண்ட பாதுகாப்புச் சபையில் 7 நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

ஆனாலும், சூடானின் மேற்கு நகரான டர்பூரில் அழிவுகள் இடம் பெற்றுள்ளதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

டர்பூர் மாநிலத்தில் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களை அடுத்து, ஒரு இலட்சம் மக்கள் தமது குடியிருப்பக்களில் இருந்து வெளியேறியுள்ளனர்.



மேலும் இரண்டரை லட்சம் மக்களுக்கு அடிப்படை உணவு மற்றும் மருத்துவ வசதிகள் தேவைபபடுகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே டர்பூரில் இருந்து இடம்பெயர்ந்த இரண்டு லட்சம் மக்கள் சாட் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

# ஜோர்தான் நாட்டவர்கள் நால்வர் ஈராக்கில் வைத்துக் கடத்தப்பட்டனர்

(பாக்தாத்)

அமெரிக்கக் கூட்டுப்படைக்கு ஆதரவாகச் செயற்பட்டுவரும் வெளிநாட்டுப் படைகளை, ஈராக் நாட்டிலிருந்து வெளியேற்றத் தீவிரவாத அமைப்பினர் வன்முறைகளைக் கையாண்டு வருகிறார்கள்.

ஈராக் பாதுகாப்பிற்காக அமெரிக்கப் படையினருடன் சேர்ந்து செயற்படும் ஜோர்தான் நாட்டு இராணுவத்தை, உடனடியாக ஈராக்கை விட்டு வெளியேற்ற அந்தநாட்டைச் சேர்ந்த 4 பேரை இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

அவர்கள் 4 பேரின் புகைப்படம் மற்றும் அடையாள அட்டை ஆகியவற்றை அவர்கள் வெளியிட்டனர். ஈராக் நாட்டிலுள்ள முஜாகுதீன் அமைப்பினரே தாங்கள் என்று அவர்கள் அறிவித்து உள்ளனர். இதைத் தொடர்ந்து தங்கள் நாட்டு மக்களை மீட்கும் நடவடிக்கையாக ஈராக் நாட்டில் இருந்து படைகளை திருபபி அழைக்க ஜோர்தான் முடிவு செய்துள்ளது.

# அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஈராக்கிற்கு நேற்று திடீர் விஜயம்

அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் எவ்வித முன்னறிவிப்புமின்றி திடீரென ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு நேற்று விஜயம் செய்தார்.

இவ்வாறு சென்ற அவர் பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன், சவுதி அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள இஸ்லாமியப் படைப்பிரிவை உருவாக்கி, ஈராக்கிற்கு அனுப்புவது தொடர்பான திட்டம் குறித்தும் ஈராக் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

ஈராக்கிடம் இடைக்கால நிர்வாகம் கையளிக்கப்பட்ட பின்னர், பவல உட்பட அமெரிக்காவின் உயரதிகாரிகள் பலர் ஈராக்கிற்குச் சென்று வந்துள்ளனர்.

இஸ்லாமியக் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அமெரிக்கப் படையினர் தாக்குதல் நடத்தும் இடமான பலூஜாப் பகுதிக்கும் பவல் விஜயத்தை மேற்கொண்டார்.


பாக்தாத் சென்றுள்ள பவல் ஈராக்கின் ஜனாதிபதி காஸி அல்-யாவீர் உட்பட முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடுவாரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை வியாழன் இரவு பலூஜா நகரில் கிளர்ச்சிவாதிகளுக்கும் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப்படைகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் 9 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்ததாக வைத்தியசாலை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக பலூஜா நகரிலுள்ள வைத்தியசாலையின் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

உலக நோக்கு

# பண்பான 'பாலூட்டி'



பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கோரா என்ற புலிக்குட்டி, மிருகக்காட்சிச் சாலையில் பிறந்தது. துரதிஷ்டவசமாக இதன்தாய் கோராவை ஒதுக்கி விட்டது. நாயிடம் தஞ்சம் புகுந்த இரண்டு மாத கோராவுக்கு தாயுள்ளத்துடன் பாலூட்டி வருகிறது இந்த நான்கு வயது நாய். இந்த நாய்க்கு ஏற்கனவே ஒரு குட்டி உள்ளது. புலிக்குட்டியுடன் தனது குழந்தைக்கும் ஒரே நேரத்தில் பாரபட்சமின்றிப் பாலூட்டுகிறது இந்த வளர்ப்புத்தாய்.

# இந்தியாவிடம் நீர்தருமாறு பாகிஸ்தான் கேட்கின்றது!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்தில் நிலவும் தண்ணீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க இந்தியாவிடம் தண்ணீர் வாங்க வேண்டும் என்று அந்தநாட்டு நாடாளுமன்றில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்தில் கடும் தண்ணீர் பிரச்சினை நிலவுகிறது. நீர்ப்பாசனம் முதல் குடிநீர் வரை தண்ணீர் இல்லாமல் மக்கள் தவிக்கின்றனர். குறிப்பாக தெற்கு பஞ்சாப்பில் இந்த நிலை காணப்படுகிறது.

பாகிஸ்தான் நாடாளுமன்றில் முன்னாள் அதிபர் பரூக் அகமது கான் லெகரி உள்ளிட்டோர் இப் பிரச்சினையைக் கிளப்பினர். இது தொடர்பான தீர்மானத்தையும் கொண்டுவந்தனர்.

தண்ணீப் பற்றாக்குறை காரணமாக தெற்குப்பஞ்சாப்பில் வறட்சி போன்ற நிலைமை காணப்படுகிறது. பயிர்கள் காய்கின்றன. தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவிடம் இருந்து தண்ணீர் வாங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த ரியாஸ் ஹுசைன் பிரிசதா கூறுகையில் - நீர் வளத்தைப் பாதுகாக்க அரசு சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் நிலத்தடி நீரில் அமிலத்தன்மை ஏற்பட்டுள்ளது.

இந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவதால் பயிர்கள் பாதிக்கின்றன. இந்தியாவிடம் இருந்து தண்ணீர் வாங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தீர்மானம் வலியறுத்தியுள்ளது.

இந்த தண்ணீரை பயன்படுத்துவதால் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. இந்தியாவுடன் காஷ்மீர் மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை நடத்துவது போல் தண்ணீர்ப் பிரச்சினை பற்றியும் பாகிஸ்தான் அரசு பேசவேண்டும்.

தெற்கு பஞ்சாப்பில் வசிக்கும் ஐந்து கோடி மக்களின் நலனைக் காக்க இந்தியாவிடம் சட்லெஜ் நதியில் இருந்து தண்ணீர் வாங்க வேண்டும்.

மங்கலா அணை, தர்பேலா அணை ஆகியவற்றில் இருந்து தெற்கு பஞ்சாப்பிற்கு தரவேண்டிய பங்கு தரப்படுவதில்லை. இப்பிரச்சினையைத் தீர்க்க நாடாளுமன்றம் நடவடிக்கை எடுக்காதவரை தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கமிஷனோ அல்லது கமிட்டிகளால் ஒன்றும் செய்யமுடியாது என்றார். பரூக் ஆசம் என்ற உறுப்பினர் பேசுகையில் - தெற்குப் பஞ்சாப்பின் தண்ணீர்ப் பிரச்சினையை அரசால் தீர்க்கமுடியவில்லை என்றால் தெற்குப் பஞ்சாப்பை தனி மாகாணமாகப் பிரிக்கவேண்டும். பகவல்பூர் மாகாணம் 1958 ஆம் ஆண்டுவரை இந்தியாவுடன் தண்ணீ ஒப்பந்தம் வைத்திருந்தது என்று சுட்டிக்காட்டினார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## பலப்பிட்டிய மேல்நீதிமன்ற பெண் நீதிபதியை

# வல்லுறவுக்குட்படுத்த முயன்ற இரு சந்தேக நபர்கள் கைது !

பலப்பிட்டிய மேல் நீதிமன்ற பெண் நீதிபதியை - மதுபோதையில் இருந்த இருவர் பாலியல் வல்லுற வுக்கு உட்படுத்த முற்பட்டதாகத் தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர் பாக, நீதிச்சேவை ஆணைக்குழு கண்டனம் தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் நீதிபதியின் உத்தி யோக வாசஸ்தலத்தை உடைத்து உட்புகுந்த இருவர், நீதிபதியின் கைப்பையில் இருந்த பணத்தைத் திருடியதுடன், நீதிபதியை பாலியல் வல்லுறவு கொள்ள முயற்சித்ததாக நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

சம்பவம் இடம்பெற்றபோது நீதி பதியின் காவலுக்கு நியமிக்கப்பட்ட பொலிஸார் இருவரும் ஆழ்ந்த தூக் கத்தில் இருந்துள்ளனர்.

சந்தேக நபர்களின் அத்துமீறல் களை அடுத்து நீதிபதி சத்தமிடவே அவர்கள் தப்பியோடியுள்ளனர்.

அதன்பின்னர் பொலிஸார் அவர் களை கைதுசெய்யும் நோக்குடன் துரத்திச் சென்றதோடு, வாகனத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இருந்தபோதிலும் சந்தேக நபர்களை அவர்களால் கைதுசெய்யமுடியவில்லை.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நண்பகல் நடத்தப்பட்ட தேடுதலின் மூலம் பொலிஸார் குறித்த சந்தேக நபர்களைச் கைதுசெய்தனர். (01)

## இலங்கைப் பணிப்பெண் பஹ்ரெய்னில் மரணம்

பஹ்ரெய்னில் இலங்கைத் தமிழ் யுவதி ஒருவர் தொற்று நோய்க்கு இலக்காகி வைத்தியசாலையில் மரண மானார்.

பஹ்ரெய்னுக்குச் சென்று எட்டு நாட்களேயான இந்தப் பெண் தொற்று நோய் பாதித்த நிலையில் வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

எனினும், சிவரஞ்சினி நாகலிங் கம் என்ற 22 வயதான யுவதியே கடந்த புதனன்று மரணமானார். இவரது சடலம் குறித்த வைத் தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படு கிறது.

## காதலை ஏற்க மறுத்ததால் விரக்தியுற்ற கான்ஸ்டபிள்

# பெண் பொலிஸாரை அணைத்தவா

# கிரனைட்டை வெடிக்கவைத்து மர

(கொழும்பு)

கொழும்பு - நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய வாகனத் தரிப்பிடத்தில் நேற்று மாலை 4 மணியளவில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவ மொன்றில் பெண் பொலிஸார் ஒருவர் உட்பட இருவர் கொல்லப்பட்டது டன், ஒருவர் காயமடைந்தார்.

குறித்த இரண்டு பொலிஸாருக் கிடையிலான காதல் தகராறு காரண மாகவே இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

மட்டக்களப்பில் பணியாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நார ஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் குறிப்பிட்ட பெண் பொலிஸாரைக் காதலித்து வந்தார்.

இவர் தனது காதலை குறித்த பெண் பொலிஸாரிடம் பலமுறை வெளிப்படுத்தியபோதும் அதற்கு இணங்க மறுத்...

நேற்று மட்டக்களப்பிலி... சென்ற இந்தப் பொலிஸ் கா... டபிள் குறித்த பெண் பொலிஸ... தனது காதலை வெளிப்... அவர் மறுப்புத் தெரிவித்... தான் தற்கொலை செய்யப்போ... கிரனைட்டை எடுத்து மிரட்டி... னத்தரிப்பிடத்திலிருந்த ஏனை... வெளியேற்றினார். பின்னர் கு... பெண் பொலிஸாரை அ... வாறே கிரனைட்டை வெடிக்... ததில் இருவரும் அந்த ... லேயே உயிரிழந்தனர் எனத்... வருகிறது.

## கருணா குழு இளைஞர் ஒருவர் கைதானார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வந்தாறுமூலைப் பகுதியிலுள்ள பலாச்சோலையில் கைத்துப்பாக்கியுடன் இருந்த கருணா குழுவைச் சேர்ந்த ஒருவர் நேற்று படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டவர் பலாச் சோலை - பேக் ஹவுஸ் வீதியைச் சேர்ந்த நந்தன் என அழைக்கப்படும் குணசேகரம் - தபேந்திரன் (வயது 20) என்ற இளைஞர் எனத் தெரிவிக் கப்படுகிறது. கைதுசெய்யப்பட்ட இளை ஞனை படையினர் ஏறாவூர் பொலி ஸாரிடம் ஒப்படைத்தனர்.

# 386 இலங்கையர்களுக்கும் அமெரிக்க 'கிறீன்காட்' விசா!

(கொழும்பு)

2005 ஆம் ஆண்டு அமெரிக் காவில் குடியேறுவதற்கென்று உலக ளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கிறீன் காட் விசா சீட்டிழுப்பு முறையில் 386 இலங்கையர்களுக்கு அமெரிக்கா வில் குடியேறுவதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

ஆண்டு தோறும் நடைபெறும் இந்தச் சீட்டிழுப்பில் இவ்வருடம் தெரிவானவர்களின் பெயர் விபரங் கள் வெளியிடப்பட்டுள்ளன.

உலகளாவிய ரீதியில் ஒரு இலட் சம் பேர் இந்த விசா முறையின் கீழ் தெரிவு செய்யப்படவிருக்கின் றனர். இதற்கென்று கிடைத்த மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 95 இலட்சமாகும்.

கடந்த 2003 ஆம் ஆண்டு நவம் பர் மாதம் முதலாம் திகதி முதல் டிசம்பர் முப்பதாம் திகதிக்குள் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களே சீட்டிழுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட் டன.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இது சம்பந்தமாக அறிவிக்கப்பட் டுள்ளது என்று அமெரிக்கத் தூதர கம் தெரிவித்துள்ளது.

# றொக்கட் வீச்சில் விவசாயி படுகாய

கற்பிட்டிப் பகுதியில் ஹெலிகொப டரிலிருந்து ஏவப்பட்ட றொக்கட் வெடித்ததில் விவசாயி ஒருவர் படுகாயமடைந்ததுடன் பயிர் நிலங்க ளும் சேதமடைந்தன.

கற்பிட்டி முஷகன்பிட்டியவில் விமானப்படையின் எம்.24 ஹெலி கொப்டர் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை ஏவப்பட்ட றொக்கட் அதன் வீச்சைத் தாண்டி சென்று வெடித்த தாலேயே இவர் காயமடைந்...

இந்த றொக்கட் விவசாய... ஒன்றில் வீழ்ந்து வெடித்தத... இலட்சம் ரூபா பெறுமதியான... கள் சேதமடைந்திருப்பதாகத்... யவருகிறது.

இந்தச் சம்பவம் குறித்து ... ணைகள் இடம்பெற்று வருவ... விமானப்படைத் தளபதி தெ... தார்.


## யாழ்ப்பாணம் மத்திய கல்லூ

வருடாந்த பரிசில் வழங்கலு
நிறுவுநர் நினைவு நாளும்

ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (நாளை) காலை 10.00 மணி

பிரதம விருந்தினர்
திரு.ஏ.ஆர். சுரேந்திரன்
(ஜனாதிபதி சட்டத்தரணி)
பரிசில் வழங்குதல்
திருமதி றேணுகாதேவி சுரேந்திரன்
தலைமை
வண.பிதா எஸ். அயின்ஸ்லி றொசான்
(செயலர் - யாழ்.ஆயர்)

பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.


# பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வே அரசாங்கத்தின் குறிக்கோள்!

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் நிரந்தரத் தீர்வைக் காண்பதே அரசாங்கத்தின் குறிக் கோளாகும்.

அரசாங்கம் மக்களின் நலன் களில் அக்கறை கொண்டிருப்பதால், விடுதலைப் புலிகளின் ஆத்திரமூட்டும் சில நடவடிக்கைகளுக்கு மத்தியி லும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்கி றது என பிரதிப் பாதுகாப்பு அமைச் சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரி வித்தார்.

கட்டுநாயக்கவில் நேற்றுக் காலை இராணுவ முகாமைப் பார்வையிட்ட பின்னர் அதிகாரிகள் மத்தியில் உரை யாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

### முஸ்லிம்....

கல்முனை அஷ்ரப் ஆதாரவைத் தியசாலையில் பிரதேப் பரிசோத னைக்காக வைக்கப்பட்ட இவரது சடலம், பிரேத ப... முடித்து உறவினர்களிடம் கைய...ப்பட் டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை எனவும், கல்முனையின் தலைமைப் பொலிஸ் அதிகாரி டபிள்யூ சி.விஜய திலக தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரி விக்கப்படுகிறது.

இந்தக் கொலைச் சம்பவத்திற்கு முஸ்லிம் இளைஞர்களிடையே ஏற் பட்ட தனிப்பட்ட முரண்பாடே கார ணம் எனவும் தகவல்கள் தெரிவிக் கின்றன. (07)

### எந்த...

விவகாரத்தின் பின்னணியில் செயற் பட்டுவருகிறார். கொழும்பில் உள்ள காக்கைதீவுப் பகுதிக்கு செல்வதற் குக்கூட கருணாவிற்கு உதவிசெய் யப்போவதில்லை.

எனக்கும், புலிகளுக்கும் இடை யில் முரண்பாடுகளை ஏற்படுத்துவ தன் மூலம் அரசியல் அரங்கிலிருந்து ஓரம் கட்ட ஐக்கிய தேசியக்கட்சி மேற்கொண்ட சதி முயற்சியே இது.

ஐக்கிய தேசியக் கட்சி தனது ஊடகச் செல்வாக்கை பயன்படுத்தி இந்த விடயத்தை திசைதிருப்பி அர சாங்கத்தை சங்கடத்தில் தள்ளுவதற்கு முயற்சிப்பதாகவும் அநுரா பண்டார நாயக்க மேலும் தெரிவித்தார். (01)

### நெடுந்தீவு...

அங்கு சென்ற சி.ஐ.டியினர் இவரைக் கைதுசெய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவுப் பொலிஸாரும் இவ ரைக் கைதுசெய்வதற்காக நேற்று முன்தினம் இரவு நெடுந்தீவிலுள்ள இவரது வீட்டிற்குச் சென்று விசாரித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் என்ன காரணத்துக்காக சி.ஐ.டியினரால் கைதுசெய்யப்பட்டார் என்பது இதுவரை தெரியவரவில்லை. (113)

### புலிகளால்...

ஆராய்வதுடன், அவர்களை அவர்க ளது குடும்பத்தாரிடம் சேர்ப்பதற்குத் தமது நிறுவனம நடவடிக்கை எடுக்கு மென்று அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

சிறுவர் போராளிகள் விடுவிக் கப்பட்டது வரவேற்கத்தக்கது என்று சர்வதேச சிறுவர் கல்வி நிலையத் தின் இலங்கைக்கான பேச்சாளர் ஜெவ்ரிகீன் தெரிவித்தார்.

### பயன்படுத்திய...

இதேவேளை, சுட்டுக் கொல்லப் பட்ட சடலங்களில் அடையாளம் காணப்பட்டும், பொறுப்பேற்கப்படாத சடலங்களை அடக்கம் செய்வதற்கு பொலிஸ் திணைக்களம் நட வடிக்கை எடுத்திருப்பதாகப் பொலிஸ மா அதிபர் இந்திரா டி சில்வா தெரி வித்தார்.






இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்ட